விலை ரூ. 20.00
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

Vijey විජය

# விஜய்

17.12.2008 - மலர் 05, இதழ் 41



## நீரில் மிதக்கும் நகரம்






## 'பிக் பென்' மணிக்கூட்டுக் கோபுரத்தின் வடிவமைப்பு

## 'இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு' மேற்கொள்ளும் பணிகள்

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாசப் பறவைகள்

விடுமுறையை கழிப்பதற்கு பல்வேறு நாடுகளில் இருந்தும் மக்கள் நம் நாட்டுக்கு வருவதை காண்கிறோம். இவர்களை உல்லாசப் பயணிகள் என்கிறோம். இவர்களைப் போன்று பல்வேறு நாடுகளில் இருந்தும் வருடாந்தம் ஏராளமான பறவை இனங்கள் நம் நாட்டுக்கு வருகை தருகின்றன. இவற்றை உல்லாசப் பறவைகள் எனக் கூறலாம். உல்லாசப் பயணிகளைப் போலவே இந்தப் பறவைகளும் குறிப்பிட்ட காலம் நம் நாட்டில் தங்கி இருந்துவிட்டு மீண்டும் தமது தாயகம் நோக்கிப் பறந்து சென்றுவிடுகின்றன.

பறவைகள் இப்படி இடம் பெயர்ந்து செல்வதற்கு காரணம் என்ன? உஷ்ண காலநிலை நிலவும் நாடுகளில் செப்டெம்பர் மாத ஆரம்பப் பகுதியில் இலையுதிர்காலம் வருகின்றது. இக்காலப் பகுதியில் மரங்களிலிருந்து இலைகள் உதிரத் தொடங்குகின்றன. இதன் பயனாக பறவைகள் கடும் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்குகின்றன. இலையுதிர் காலத்துக்குப் பின்னர் டிசம்பரில் குளிர்காலம் ஆரம்பமாகின்றது. இந்த குளிர்காலப் பகுதியில் உணவுப் பஞ்சமானது இலையுதிர்காலத்தை விட மிக மோசமான நிலையில் இருக்கும்.


ஹிருண்டோ ருஸ்டிஸ்

இதன் காரணமாக வெப்பவலய நாடுகளில் வசிக்கும் பறவைகள் குளிர்காலத்தில் வேறு வெப்பவலய நாடுகளுக்கு இடம்பெயருகின்றன. இந்தப் பறவைகள் இந்நாடுகளில் சுமார் ஏழு மாதகாலம் வரை தங்கி இருக்கும்.


அனஸ் குவெர்குவோதுலா

வருடாந்தம் சுமார் 150 வகையான பறவைகள் இவ்வாறு இலங்கைக்கு வருகை தருகின்றன. இப்படி இடம்பெயரும் பறவைகள் நம் நாட்டுக்குக் கிடைக்கும் சொத்துக்கள் போன்றவை. நமது சூழலை அழகுபடுத்த அவை பெரிதும் உதவுகின்றன.


டென்ட்ரோனந்துஸ் இன்டிகஸ்

இலங்கையில் காணப்படும் இத்தகைய இடம்பெயரும் பறவைகளில் டெர்ப்ஸிகேபரடிசி, ஹிருண்டோ ருஸ்டிஸ், அனஸ் குவெர்குவோதுலா, டென்ட்ரோனந்துஸ் இன்டிகஸ், என்பனவும் அடங்கும்.

இயற்கையின் நியதிப்படியே இந்தப் பறவைகள் இவ்வாறு இடம் பெயருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் உள்ள பறவைகள் ஆபிரிக்காவுக்கும் வட ஆசியாவிலுள்ள பறவைகள் தெற்கு ஆசியாவுக்கும், கிழக்கு ஆசியாவிலுள்ள பறவைகள், அவுஸ்திரேலியாவுக்கும் வட அமெரிக்காவிலுள்ள பறவைகள் தெற்கு ஆசியாவுக்கும் இவ்வாறு இடம்பெயருகின்றன.

உஷ்ணக் காற்றில் பறப்பது இலகுவாக இருப்பதால் கழுகு, பருந்து போன்ற பெரிய பறவைகள் பகல் வேளையில் பறந்து இடம் பெயருகின்றன. சிறிய இன பறவைகள் இப்படி உஷ்ணநிலையில் பறக்க முடியாததாகவும் பெரிய பறவைகளுக்கு இரையாக நேர்வதாலும் இவை இரவு நேரத்திலேயே இடம்பெயருகின்றன.


டெர்ப்ஸிகேபரடிசி

## செயலாளர் பறவை

செக்ரட்டரி பேர்ட் (Secretary Bird) என்று அழைக்கப்படும் பறவை இனம் ஒன்றை தமிழில் செயலாளர் பறவை என்று அழைக்கலாமா? இதனை இவ்வாறு அழைப்பதற்குக் காரணம் இதன் கொண்டை இறகு பேனா (Quill driver) போன்று இருப்பதுதான். 19 ஆம் நூற்றாண்டில் இதன் இறகுகளைப் பேனாவாகப் பயன்படுத்தினர். அதனால் தான் இறகுப் பேனா (Quill driver) என்ற பெயர் வந்தது. அதுவே செயலாளர்களையும் அந்தப் பெயரில் அழைக்கக் காரணமாகி இருக்கலாம்.



இந்த செயலாளர் பறவைக்கு நீண்ட கால்களும் நீண்ட வாலும் உள்ளன. இந்தப் பறவை பாம்பு, தவளை, ஆமை, எலிகள் மற்றும் ஊர்வன என்பனவற்றை வேட்டையாடி உண்ணும். இது வேட்டையாடும் விதமே தனி. பாம்பு போன்ற அபாயகரமான உயிரினங்களை வேட்டையாடும்போது அவற்றைப் பிடித்து தன் கால்களால் நிலத்தில் அடித்து ஆகாயத்தில் சுழற்றி அவற்றை உணர்விழக்கச் செய்து அதன்பின்னரே தின்னும்.

தென் ஆபிரிக்காவில் பாம்புகள் மற்றும் எலிகளை அழிப்பதற்காக இந்த பறவை இனத்தைப் பாதுகாத்து வருகின்றனர். இது தனது நீண்ட கால்களின் சக்தியால் வெகு தூரத்துக்கு நடக்கக்கூடியது. இந்தப் பறவை ஒரு நாளில் இருபது மைல் தூரம் வரை நடக்கும்.

சாம்பல் நிறமும் இறக்கைகளில் கறுப்பு நிறமும் கொண்ட இப்பறவை மூன்றடி உயரம் வரை இருக்கும். ஆபிரிக்காவில் இப்பறவை பரந்த அளவில் காணப்படுகின்றது.

அநேகமாக திறந்த வெளிகளில் காணப்படும் இப்பறவை எரியுண்ட பகுதிகளில் இறந்த மற்றும் காயமடைந்த உயிரினங்களைத் தேடி அலையும். அநேகமாகத் தரையில் நடமாடும் இப்பறவை தேவையேற்படும்போது மட்டுமே பறக்கும் இயல்புடையது.


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..................
முகவரி: ..................
தொ.பே.இல: ..................
எமக்கு ............ மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.................. ..................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653




பாடசாலை மாணவர்களுக்கான
ஊடக சங்கம்
விண்ணப்பங்களை அனுப்பி விட்டீர்களா?
தேசிய கல்வி நிறுவகம் - 'விஜய்' இணைந்து நடத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கத்தில் இணைவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் இன்னமும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவில்லையாயின் விரைவாக அனுப்பி வையுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு...
தொ.பே இல - 5383653 அல்லது சுயமுகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய நீள் கடித உறையொன்றை அனுப்பி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
முகவரி: 'ஊடக சங்கம்' விஜய், த.பெ.எண் 2037 கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (உ/தர) பாடத்திட்டத்தில் தகவல் தொடர்பாடலும் கட்டாய பாடம்

2009 ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த (உ/தர) மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் 'தகவல் தொடர்பாடலும் தொழில் நுட்பமும்' கட்டாய பாடமாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய அடுத்த வருடம் தொடக்கம் உ/தர வகுப்பு மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இதற்கான உ/தர பரீட்சைகளை நடத்தவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு பாடத்திட்டத்திற்கமைய தொடர்பாடல் பாடத்தை கற்க இருக்கும் மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை பாடசாலைகளுக்கு விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் உ/தர வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக பாடமாகவே தகவல் தொடர்பாடல் பாடம் இருந்து வந்தது. ஆனால், அடுத்த வருடம் முதல் கட்டாய பாடமாக இப்பாடம் சேர்க்கப்படவுள்ளது.



இதற்கமைய உ/தர வகுப்பு மாணவர்கள் கற்கின்ற கட்டாய பாடங்கள் மூன்றில் தகவல் தொடர்பாடல் பாடத்தையும் ஒரு பாடமாகத் தெரிவு செய்து பரீட்சைக்கு தோற்றமுடியும்.

மேலும், இப்பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த (சா/தர) பரீட்சை

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான விண்ணப்பம்



நடைபெற்று வருகின்ற க.பொ.த (சா/தர) பரீட்சை விடைத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகளுக்கு இருபத்தையாயிரம் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பணிகளுக்கு பதினையாயிரம் ஆசிரியர்களே தேவைப்பட்டிருந்தனர் என்றாலும் தேவைக்கு அதிகமாக விண்ணப்பித்துள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டின்போது பழைய பாடத்திட்டத்திற்கான விடைத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகள் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதியும் புதிய பாடத்திட்டத்திற்கான பணிகள் ஜனவரி முதல் வாரத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனல் மின்நிலைய பணிகள் ஆரம்பம்

வத்தளை, கெரவலப்பிட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனல் மின் உற்பத்தி நிலையத் தின் முதலாம் கட்ட மின் உற்பத்திப் பணிகள் டிசம்பர் 9 ஆம் திகதி முதல் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, அனல் மின் நிலையத்தின் மூலம் மேலதிகமாக 300 மெகாவோல்ட் மின்சாரம் கிடைக்கும் என்று கருதப்படுகின்றது.

இந்த மின்உற்பத்தி நிலையத்தின் பணிகள் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக அமைகின்றன. இதில் முதலாவது பிரிவில் 200 மெகாவோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன், இரண்டாவது பிரிவில் மின் உற்பத்தியை இயற்கை வாயுமூலம் மேற்கொண்டு 100 மெகாவோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி



தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு (2009-2010) பட்டதாரி ஆசிரியர்களை சேர்க்கும்பொருட்டு, அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு தொழில் சார்ந்த தராதரத்தை வழங்கும் பொருட்டு, தேசிய கல்வி நிறுவகம் இரண்டு வருடகாலத்திற்கான மேற்படி கற்கை நெறியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்தப் பயிற்சி நெறியில் இணைவதற்கு விரும்புகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் அவ்வப் பிராந்தியங்களில் உரிய விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

விஜய் வழங்கும் அறிவுசார் போட்டி!

உங்கள் திறமைக்கு ஒரு சவால்...

போட்டி விபரங்கள்

டிசம்பர் மாதம் முழுவதும் வெளிவருகின்ற 'விஜய்' இதழ்களில் பலதரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பொது அறிவுக் கேள்விகள் ஒவ்வொரு இதழிலும் தலா ஐந்து கேள்விகள் வீதம் வழங்கப்படும். கேள்விகளுக்கு அருகே வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும். இதன்படி ஐந்து வாரங்களைக் கொண்ட டிசம்பர் மாதத்தில் மொத்தமாக 25 கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும். இந்த கேள்விகளில் கூடிய அளவில் சரியான விடைகளை அடையாளப்படுத்தியோர் வரிசைப்படுத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

ஐந்து வாரங்களும் பகுதி பகுதியாக கேள்விகள் வழங்கப்படுகின்றமையால் ஐந்து பகுதிக் கேள்விகளையும் பகுதி - 1, 2, 3, 4, 5 என சேகரித்து அவற்றிற்கான விடைகளை எழுதி அவற்றை ஒட்டு மொத்தமாக எமக்கு தபாலில் அனுப்பவும். தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசுகள் ஏராளம்

கல்குலேட்டர்கள் → 05
விலையுயர்ந்த பேனாக்கள் → 15
கீடெக்குகள் (Key Tag) → 15

இன்னும் பல ஆறுதல் பரிசும் உண்டு

இந்த வாரத்திற்கான கேள்விகள் பகுதி - 05


11. சர்வதேச ரீதியில் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சர்வதேச தரச்சான்றிதழ் எது?
(ISO, SLS, BETA)
12. இலங்கையில் கம்பன் கழகத்தை ஆரம்பித்து நடத்தி வருபவரின் பெயர் என்ன?
(கம்பனார், கம்பவாரிதி இ.ஜெயராஜ், தேசிங்குனார்)
13. விண்வெளிக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட செய்மதியின் பெயர் என்ன?
(ஸ்புட்னிக், யோகோ, வென்சாட்டிக்)
14. இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
(1978, 1985, 1997)
15. மகாபாரதத்தில் வரும் ஐந்து சகோதரர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
(கௌரவர்கள், பஞ்சபாண்டவர்கள், கர்ணன்)

மிகுதி கேள்விகளை அடுத்தடுத்த இதழ்களில் எதிர்பாருங்கள்.

டிசம்பர் மாத இதழ்களை இன்றே பதிவு செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீர்மட்டம் உயரும் பிரச்சினைக்கு தீர்வாக 'மிதக்கும் நகரம்'

உலகம் வெப்பமடைவதன் காரணமாக வடவரைக் கோளத்திலும் தென்னரைக் கோளத்திலும் உள்ள பனிக்கட்டி மலைகளெல்லாம் உருகி ஆறாய் பெருக்கெடுத்து கடலை அடைகின்றன. இதனால், கடல் மட்டம் உயர்ந்து இன்று உலகம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. காலநிலை மாற்றம் குறித்து சர்வதேச காலநிலை அமைப்பான IPCC இன் அறிக்கையின்படி 2100 ஆம் ஆண்டளவில் கடல் நீரின் மட்டமானது 9 சென்றிமீற்றரில் இருந்து 88 சென்ரிமீற்றர் வரை உயரும் வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கடல் அரக்கனின் அச்சுறுத்தல்

பிரித்தானியாவின் தலைநகர் லண்டன் மாநகரம், ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் ஒன்றாகிய நியூயோர்க் போன்ற உலகின் பிரபல நகரங்கள் சமுத்திர நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. அத்துடன், மாலைதீவு, துவாலு, கிரிபட்டி போன்ற மிகச்சிறிய தீவுகளில் வாழும் மக்களும் மிக மோசமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என அஞ்சப்படுகின்றது. கடல் அரக்கனுக்கு இத்தீவுகள் பலியாவது மட்டுமல்ல ரம்யமான வசிப்பிடங்கள், சிறந்த குடிதண்ணீர், அழகிய சூழல் என்பனவற்றையும் இழக்கும் நிலை ஏற்படும்.

இத்தகைய சகல நெருக்கடிகளுக்கும் நீண்ட காலத் தீர்வொன்றை முன்வைக்க பெல்ஜியம் நாட்டவரான கட்டட நிர்மாணச் சிற்பி வின்சன்ட் கோலோபோ முன்வந்துள்ளார்.

## லில்லிபேட் சிட்டி எனும் மிதக்கும் நகரம்

வின்சன்டின் அந்தப் படைப்பை லில்லிபேட் சிட்டி (Lillypad City) லில்லிபத்திர நகரம் அல்லது மிதக்கும் நகரமென அழைக்கலாம். பார்வைக்கு ஊதிப்பெருத்த மாபெரும் றப்பர் படகு போல் தோற்றமளிக்கும் இம் மிதக்கும் நகரமானது காலநிலைப் பாதிப்பால் புகலிடம் தேடும் மக்களுக்கு மனதிற்கு இதமளிக்கும் எதிர்கால வாழ்விடமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கடல் நீரின் மேல் மிதக்கும் வகையில் அமைக்கக்கூடிய உருவாக்கக் கூடிய இந்த மிதக்கும் நகரொன்றில் 50,000 பேர் வரை வாழக்கூடிய இடவசதிகள் காணப்படுகின்றன.

"சில நாடுகள் கடல் நீரின் மட்டம் உயர்வடைவதற்கு தீர்வாக தமது கடலோரப் பிரதேசத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பாரிய சுவர்களை எழுப்பத் திட்டமிட்டுள்ளன. இதற்கு பில்லியன் கணக்கான டொலர்களைச் செலவழிக்கவும் தயாராகவுள்ளன. எனினும், இந்த 'லில்லீ பத்திரத் திட்டத்தின்' மூலம் குறைந்த செலவில் நிரந்தர தீர்வொன்றைக் காண நான் முயற்சிக்கிறேன்'' என்று மிதக்கும் நகரத் திட்டத்தின் நிர்மாண கர்த்தாவாகிய வின்சன்ட் கோலேபோ கூறுகின்றார்.

உலகம் முழுவதும் சுற்றி வரக்கூடிய இந்த மிதக்கும் நகரத்தின் மத்தியில் பாரிய ஏரி ஒன்றும் காணப்படுகின்றது. அதன்மூலம் மழைநீர் சேமிக்கப்படுவதோடு அதனைச் சுத்தப்படுத்துதலும் நடைபெறும். இந்த நகரத்தின் மக்கள் எந்த நேரமும் கடல்நீரை மாத்திரமே பார்ப்பதால் அவர்களின் கண்களுக்கு மாற்றம் தெரியவேண்டும் என்ற நோக்கில் ஓரளவு உயரமான மலைகள் போன்ற அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

காற்றின் சக்தியாலும் கடல் அலைகளாலும் மின்வலுவை உற்பத்தி செய்வதோடு அதன்மூலம் நகரத்தின் முழு சக்தி வளத்தேவைகளுக்கு மேலதிகமாக மின்சக்தியை வழங்கக் கூடிய அளவிற்கு மின் உற்பத்தி செய்யமுடியும். மின்சக்தி பயன்பாட்டின் விளைவாக எவ்வித கழிவுகளும் வளிமண்டலத்திற்கு வெளியேற்றப் படாமல் பாதுகாப்பதோடு சகல கழிவுப்பொருட்களையும் மீளுருவாக்கம் செய்யவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உயர்ந்து வரும் கடல் நீர்மட்டத்திற்கு வெற்றிகரமான சிறந்த தீர்வினை பெற்றுக்கொடுக்கும் இம்மிதக்கும் நகரம் மிக விரைவில் யதார்த்தமாகும் வாய்ப்புகள் இருக்கின்றன. இதன்மூலம் மாலைதீவு போன்ற பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் மிகச்சிறிய தீவுகளுக்கு மாத்திரமல்லாது கரையோரத் தாழ்நிலங்களில் பெருந்தொகையான மக்கள் வாழும் இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா (மியன்மார்) போன்ற நாடுகளுக்கும் ஏன் நமது இலங்கைக்கும் கூட நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

இரஞ்சித் ஜெயகர்

**உலகம் முழுவதும் சுற்றி வரக்கூடிய இந்த மிதக்கும் நகரத்தின் மத்தியில் பாரிய ஏரி ஒன்றும் காணப்படுகின்றது. அதன்மூலம் மழைநீர் சேமிக்கப்படுவதோடு அதனைச் சுத்தப்படுத்துதலும் நடைபெறும். இந்த நகரத்தின் மக்கள் எந்த நேரமும் கடல்நீரை மாத்திரமே பார்ப்பதால் அவர்களின் கண்களுக்கு மாற்றம் தெரியவேண்டும் என்ற நோக்கில் ஓரளவு உயரமான மலைகள் போன்ற அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகங்களுக்கு இடையிலுள்ள சிறு கிரகங்கள்



## சிறு கிரகத்தொகுதி

நூற்றுக்கு 10 சதவீதமான சிறு கிரகங்கள் அளவில் பெரிதானவை. அவை சிறு கிரக வளையத்திற்கு அப்பால் விண்வெளியில் இருக்கின்றன. அவற்றிடையே சிறு கிரகங்கள் கொத்துக்களாகவும் காணப்படுகின்றன. இது 'சிறு கிரகங்களின் கொத்து' அல்லது 'சிறு கிரகத் தொகுதி' என அழைக்கப்படுகின்றது. பல சிறு கிரகங்கள் ஒன்றாக இணைந்தே இத்தொகுதி ஏற்படுகின்றது.

வியாழனின் சுற்றுப் பாதையைச் சுற்றி 'ட்ரோஜன்' என அழைக்கப்படும் இரு சிறு கிரகத்தொகுதிகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று வியாழனின் சுற்றுப் பாதையில் முன்னே செல்ல, மற்றையது பின்னே பயணிக்கும். அப்பலோ, அமோர், ஏதென் என பெயரிடப் பட்டுள்ள சிறு கிரகத் தொகுதிகள் புவிக்குச் சமீபமாக உள்ள சுற்றுப்பாதைகளில் பயணிக்கும் சிறு கிரகத் தொகுதிகளாகும்.




## சிறு கிரக வளையம்


செவ்வாய் கிரகத்திற்கும் வியாழனுக்கும் இடையில் 'சிறு கிரக வளையம்' அமைந்துள்ளது. இவ்வளையத்தினுள் மில்லியன் கணக்கான சிறு கிரகங்கள் காணப்படுகின்றன. நன்கு உருவாக்கம் பெற்றிருந்த கிரகங்கள் சிறுசிறு பகுதிகளாக உடைந்ததினால் அல்லது அளவில் பெரிதான கிரகங்கள் உரியமுறையில் உருவாக்கம் பெறாத காரணத்தினால் கோள் மண்டலத்தினில் சிறு கிரகங்கள் தோன்றி இருக்கலாம் என வானியலாளர்கள் நம்புகின்றனர். இந்த வளையத்தினுள் உள்ள மிகப் பெரிய சிறு கிரகம் 'செரஸ்' என்பதாகும். 'செரஸ்' 900 கிலோமீற்றர் அகலமுடையது. 'செரெஸ்' சிறுகிரகத்தை அடுத்து சாதாரண கண்களால் பார்க்கக்கூடிய புகழ்பெற்ற சிறுகிரகம் ஒன்றுதான் 'வெஸ்ட்டா' ஆகும்.

## பெறுமதி

இரும்பு, காபன், நிக்கல், பிளெட்டினம் முதலான பதார்த்தங்களால் சிறு கிரகங்கள் உருவாகியுள்ளன. இரண்டு கிலோமீற்றர் அளவு விட்டத்தைக் கொண்ட M வகை சிறுகிரகம் ஒன்றில் 30 பில்லியன் தொன் இரும்பு அடங்கி இருப்பதோடு, நிக்கல், கொபொல்ட் மற்றும் பிளெட்டினம் என்பன சிறிய அளவில் அடங்கியுள்ளன.

பொருளாதார ரீதியில் பார்க்கும்பொழுது சிறு கிரகங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தனவாகும். இனிவரும் காலங்களில் இவற்றின் பொருளாதாரப் பெறுமதியை புவியில் வாழும் நாமும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் வானியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.



## கெஸ்ப்ரா

கோள் மண்டலத்தில் உள்ள 5000 இற்கும் அதிகமான சிறு கிரகங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு, இனங்காணப்பட்டுள்ளன.


எனினும், இவற்றில் கோளவடிவில் அமைந்துள்ள 250 கிலோமீற்றரிலும் அகலமான சிறு கிரகங்கள் வெறும் 10 மாத்திரமே காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'கெஸ்ப்ரா'. 'கெஸ்ப்ரா' சமமற்ற வடிவமானதும் அளவில் சிறியதுமான ஒரு சிறு கிரகமாகும். இது கற்பாறைகளால் ஆனது.

## சிறு கிரகங்களின் சந்திரன்கள்

1993 ஆம் ஆண்டு 'நாஸா' நிறுவனத்தால் அனுப்பப்பட்ட 'கலிலியோ' விண்வெளி ஓடமானது, செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையில் அமைந்துள்ள சிறு கிரக வளையத்திற்கு அருகில் செல்லும்பொழுது இதுவரை இனங்காணப்படாத விண்பொருள் ஒன்றைக் காணக் கூடியதாக இருந்தது.

மேலே காணப்படும் படத்தில் உள்ள 'ஐடா' எனும் சிறுகிரகத்தின் அருகில் தெற்குப் பக்கமாக உள்ள வெள்ளை நிறப் புள்ளி போல் காட்சியளிக்கும் மிகச்சிறிய விண்பொருள் ஐடாவின் சந்திரனாகும். 'டக்டில்' என்பது அதன் பெயர். 35 மைல் நீளமும் 15 மைல் அகலமும் கொண்டது தான் 'ஐடா' எனும் சிறு கிரகம். அதன் சந்திரனாகிய 'டக்டில்' வெறும் ஒரு மைலுக்கும் குறைவான நீளத்தையே கொண்டுள்ளது. இந்த 'டக்டில்' அளவில் பெரிய சிறு கிரகங்களுடன் மோதாமல் இன்றுவரை தப்பி இருப்பதாகவே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்




**கிரகங்கள் சிறுசிறு பகுதிகளாக உடைந்ததினால் அல்லது அளவில் பெரிதான கிரகங்கள் உரியமுறையில் உருவாக்கம் பெறாத காரணத்தினால் கோள் மண்டலத்தினில் சிறு கிரகங்கள் தோன்றி இருக்கலாம் என வானியலாளர்கள் நம்புகின்றனர்**

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அணைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
60 நாட்களில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
Easy Way English
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் பாடசாலைக்கு செல்லும் மாணவ மாணவிகள் பெரும்பாலும் மாலையில்தான் வீடு திரும்புகின்றனர். இதற்கிடையில் உணவை அவர்கள் ஆர்வமின்றிக் கடமைக்காக உட்கொள்கின்றனர். அதேபோல், தண்ணீர் அருந்துவதும் குறைவாகவே உள்ளது. பாடசாலைக்கு எடுத்துச் செல்லும் தண்ணீர் போத்தலை மீண்டும் அவ்வாறே எடுத்து வரும் பிள்ளைகளும் உள்ளனர். தண்ணீர் எமது உடலுக்கு அத்தியாவசியமானது. ஒரு சில நோய்களைக் குணப்படுத்தத் தண்ணீர் அவசியமாகும். தண்ணீர் அருந்தாமையே நோய்கள் பல ஏற்படக் காரணமாகின்றது.

நாம் தண்ணீர் அருந்துவதனால் உடலுக்குள் உருவாகும் கழிவுகள், விஷப் பொருட்கள், அசிட் வகைகள் என்பன சிறுநீர் மூலம் வெளியேறுகின்றன. போதியளவு தண்ணீர் அருந்தாவிட்டால் அந்த நச்சுப் பொருட்கள் அனைத்தும் உடலுக்குள் தங்கிவிடும். இவ்வாறு உடலுக்குள் தொடர்ந்து நச்சுப் பொருட்கள் சேர்வதனால் உடல் சுகாதாரம் பாதிக்கப்படும். இதன்படி எமக்கு மிகவும் அத்தியாவசியமான உறுப்பாக சிறுநீரகங்கள் உள்ளமையை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

# சிறுநீரக
# அதிகம் நீர் குடி

## சிறுநீரக நோயாளிகள் அதிகரிப்பு

எமது நாட்டில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை குறிப்பிடுகின்றது. சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வேறு சிறுநீரகங்கள் பொருத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. சிறுநீரக நோய்கள் எம்மைப் பாதிக்காமல் இருக்க வழிவகைகள் உண்டு.

## சிறுநீரகம் போஞ்சி விதையைப் போன்றது

அனைவருக்கும் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. அவை வயிற்றுக்கு பின் பகுதியில் அமைந்துள்ளன. அதாவது, உடலின் பின் பாகத்தில் என்று கூறமுடியும். உருவத்தில் போஞ்சி விதைக்குச் சமமானது. ஒரு சிறுநீரகம் நீளத்தில் $4^{1/2}$ அங்குலமாகவும் அகலம் $1^{1/2}$ அங்குலமாகவும் உள்ளது. இந்த இரண்டு சிறுநீரகங்களில் இடது பக்க சிறுநீரகம் வலது பக்க சிறுநீரகத்தை விட சற்று உயரமாக அமைந்திருக்கும்.



## சிறுநீரகங்கள் ஆற்றும் பணிகள்

✱ உடலில் புரோட்டினால் வெளியேற்றப்படும் கழிவுகளை வெளியேற்றுதல்.

✱ உடலில் சேரும்கழிவுகளை வெளியேற்றுதல்.

✱ எலும்புகளின் பாதுகாப்புக்குத் தேவையான கல்சியம் மற்றும் பொஸ்பெட் என்பனவற்றைக் கட்டுப்படுத்தல்.

✱ உடலின் ஹீரோகுளோபின் அளவினைக் கட்டுப்படுத்துதல்.

✱ இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல்.

## சிறுநீரக நோயின் அடிப்படை அறிகுறிகள்

சிறுநீரக நோய் இருப்பதனை அறிந்து கொள்ள சில அடிப்படை அறிகுறிகள் உள்ளன.

✱ சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல்.

✱ சிறுநீர் நுரைத்து வெளியேறல்.

✱ கண்களைச் சுற்றி வீக்கம்.

✱ அடிக்கடி களைப்பு.

✱ அடிக்கடி அயர்ச்சி நிலை.

✱ உணவில் விருப்பமின்மை.

✱ உடல் பலவீனம்.

✱ உடல் மற்றும் கால்கள் வீக்கமடைதல்.

✱ வாந்தி வரும் தன்மை.

சிறுநீரகங்கள் வயதின் அடிப்படையில் பாதிக்கப்படுவதில்லை. சிறு வயதிலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படலாம். அதேபோன்று, இளம் வயதிலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படக் கூடும்.

**சிறுநீரகங்கள் வயதின் அடிப்படையில் பாதிக்கப்படுவதில்லை. சிறு வயதிலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படலாம். அதேபோன்று, இளம் வயதிலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படக்கூடும்.**

## சிறுநீரகம் பாதிக்கப்படும்போது அதனை அறிய முடியுமா?

சிறுநீரகம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பின்னரே நோயாளிக்கு அது பற்றித் தெரிகின்றது. சிறுநீரகம் பாதிக்கப்பட ஆரம்பிக்கும் முதல் காலப்பகுதிகளில் அது பற்றிய எந்த அறிகுறியும் நோயாளிக்கு தெரியவராது.


## இரத்தத்தை சுத்தப்படுத்துவது எப்படி?

சிறுநீரகம் முழு உடலினதும் இரத்தத்தை சுத்தப்படுத்துகின்றது. இது ஓர் இயந்திரத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. இரத்தம் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை 3-4 நாட்களுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டும்.

## அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கக்கூடாதா?

அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைப்பதனால் சிறுநீரகங்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக விஞ்ஞான ரீதியில் நிரூபணம் செய்யப்படவில்லை.

எனினும், வடமத்திய மாகாண தண்ணீரில் உள்ள ரசாயனத் திரவங்களினால் இவ்வாறான நோய்களுக்கு ஆளாகும் வாய்ப்பு உண்டு என்ற கருத்து நிலவுகின்றது.



## சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது என்றுஅறிந்தவுடன் என்ன செய்ய வேண்டும்?

சிறுநீரகங்கள் இரண்டினதும் செயற்பாடுகள் 15 சதவீதம் குறைந்த பின்னரே நாம் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை பற்றி அறிந்து கொள்கின்றோம். மருந்துகள் உட்கொள்வதன் ஊடாக சிறுநீரகங்களை செயல்படுத்த முடியும். அத்துடன், சிறுநீரகங்களை செயற்படுத்த இரத்தத்தையும் சுத்தப்படுத்த வேண்டும்.

## சிறுநீரகம் பொருத்துதல்

சிறுநீரகங்கள் முழுதுமாக பாதிக்கப்பட்ட பின்னர் வேறு சிறுநீரகம் பொருத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆரோக்கியமான நபரிடமிருந்து பெறப்படும் சிறுநீரகத்தை சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்துவதனையே இவ்வாறு கூறமுடியும்.

சிறுநீரக மாற்று சிகிச்சையை மிகவும் அவதானத்துடன் செய்ய வேண்டும். பொருத்தமற்ற சிறுநீரகம் பொருத்தப்பட்டால் அதனை துரித கதியில் உடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ங்களைப் பாதுகாக்க ...ப்போம்





நிராகரித்து விடும். எனினும், பொருந்தும் சிறுநீரகம் பொருத்த படின் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக வாழ முடியும்.

### சிறுநீரகத்தைப் பொருத்தும்போது....

சிறுநீரகத்தைப் பொருத்துவதற்கு $4^{1/2}$ மணித்தியாலங்கள் தேவைப்படும். மூன்று கட்டங்களில் சிறுநீரகம் பொருத்தப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- முதலாவது கட்டத்தில் பொருத்தமான சிறுநீரகம் பெறப்படுகின்றது.
- இரண்டாவது கட்டமாக சிறுநீரகம் பெறப்பட்ட பின்னர் சுத்தப்படுத்துவதற்காக தற்காலிகமாக பேணப்படுகின்றது.
- மூன்றாவது கட்டத்தில் சிறுநீரகம் பொருத்தப்படுகின்றது.

### சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்பு

சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின் ஆறு மாதங்களுக்கு மருந்துகளையும் அதன் பின்னர் வாழ்நாள் முழுவதற்குமான மருந்துகளையும் உட்கொள்ள வேண்டும். புதிய சிறுநீரகத்தை உடல் நிராகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். அந்த நிலையை சரி செய்ய மருந்துகள் வழங்கப்படுகின்றன. சிறுநீரகம் பொருத்தப்பட்ட பின்னர் நோயாளி கவனமாக இருப்பின் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக வாழமுடியும். இதனால், நோய்க்கிருமிகளிடமிருந்து புதிய சிறுநீரகத்தைப் பாதுகாக்க வேண்டும். மற்றும் உணவுகளை மருத்துவரின் ஆலோசனையின் பெயரில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

### சிறுநீரகம் வழங்கும் நபர் எவ்வாறானவராக இருக்க வேண்டும்?

அந்நபர் ஆரோக்கியமானவராக இருப்பது அவசியம். வழங்கப்படும் சிறுநீரகமும் ஆரோக்கியமானதாக இருத்தல் வேண்டும். சிறுநீரகங்கள் இரண்டும் ஆரோக்கியமாக செயற்படும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். 30-55 வயதினரின் சிறுநீரகங்களே வழங்கப்படுவதற்கு உரியதானதாக அமையும் சிறுநீரகங்களைப் பொருத்துவதில் ஆண், பெண் பேதமில்லை. பெண்ணின் சிறுநீரகத்தை ஆணுக்கும் பொருத்த முடியும். வழங்கப்படும் சிறுநீரகத்தினதும் பெற்றுக்கொள்ளும் நபரினதும் இரத்த வகை சமமானதாக இருப்பது அவசியமாகும்.


### தண்ணீர் அதிகம் அருந்துங்கள்

இத்தகைய நிலைக்கு ஆளாவதை தவிர்ப்பதற்கு நாளாந்தம் அதிகளவு தண்ணீர் அருந்துவது அவசியமாகும். பொதுவாக ஒரு நாளைக்கு 6 லீற்றர் தண்ணீர் அருந்துவது மிக அவசியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டை-வாய்ப் பகுதிகளில் ஏற்படும் உபாதைகள்




சிலரின் தொண்டைப்பகுதியில் எப்பொழுதுமே வலி இருந்து கொண்டிருக்கும். தொண்டைப் பகுதியில் ஏற்படும் பல்வேறு கிருமித்தொற்றல்களினாலேயே இவ்வாறு அடிக்கடி தொண்டை வலி ஏற்படுகின்றது.



## குரல் ஏற்படும் விதம்

தொண்டையில் இருக்கும் குரல் நாண்கள் சுவாசத்தின் போது பிரிந்து சுவாசக்குழாயினுள் காற்று செல்வதற்கு இடமளிக்கின்றது. இங்கு குரல் நாண்களில் ஏற்படும் அதிர்வுகளினால் ஒலி எழுகின்றது. இதனுடன், உதடு, நாக்கின் செயற்பாடுகளினால் ஒலி அலைகளில் மாற்றம் ஏற்பட்டு அது குரலாக மாறுபடுகின்றது.

### குரல் மாறுபடுவதற்கான சில காரணங்கள்

* தொண்டைப்பகுதியில் ஏற்படும் கோளாறு.
* தொண்டையில் புற்றுநோய்.
* குரல் நாண்கள் செயற்படாமை.
* அதிக நேரம் உரக்கக் கதைத்தல்.

ஆகியன குரல் மாறுவதற்குரிய குறிப்பிடத்தக்க சில எளிய காரணங்களாக அமைகின்றன.

தொண்டையில் கரகரப்பு ஏற்பட்டு இரு வாரங்களாகியும் குரல் பழைய நிலைமைக்கு வரவில்லையாயின் மருத்துவரிடம் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம்.



## முரசிலிருந்து இரத்தம் கசிதல்

சிலருக்கு முரசு வீக்கமடைந்து இரத்தம் வடியும். முரசு வீங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு.

* பல் துலக்கும்போது ஏற்படும் கவனயீனம்.
* பற்கள் வடிவம் மாறி இருப்பதனால் பற்களை சரியாகத் துலக்க முடியாமை. இதனால் வாய் சுகாதாரத்தை சரிவரப் பேண முடியாமல் போதல்.
* பற்களுக்கிடையே இடைவெளி இருப்பதனால் அதில் உணவுத் துணிக்கைகள் தங்கி விடுகின்றமை.
* சளி மூக்கை அடைத்திருக்கும் பட்சத்தில் வாயினால் மூச்செடுப்பதனால் வாய்ப்பகுதி வறண்டு விடுதல்.
* விற்றமின் பீ மற்றும் சீ குறைபாடு.
* லியுக்கேமியா மற்றும் இரத்தம் சார்ந்த நோய்களினால் இரத்தம் உறைதல் சரியான முறையில் இடம் பெறாமை.




## வாயில் அடிக்கடி புண்கள் ஏற்படுவது ஏன்?

பொதுவாக பலருக்கு இந்தப் பிரச்சினை இருக்கின்றது. இதற்கு உறுதியான காரணங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த புண்கள் ஆழமாக இராது. சிலவேளைகளில், 5 மி.மீ விட குறைவான அளவினைக் கொண்டிருக்கும். முதலில் இந்த புண்கள் அரிப்பு உணர்வினை ஏற்படுத்தும். ஒரு வாரம் வரை இவை இருக்கும். இந்த புண்கள் கன்னப்பகுதிகளிலும் உதட்டுப் பகுதிகளிலும் அடிக்கடி ஏற்படும். நாக்குகளிலும் புண்கள் ஏற்படலாம். இவை தானாகவே குணமடைந்து விடும். எனினும், வலியைக் குறைத்து விரைவில் குணமடையச் செய்ய சிகிச்சைகள் உள்ளன.

## வாயில் துர்நாற்றம் வீசுவது ஏன்?

சிலர் தங்கள் வாயில் துர்நாற்றம் வீசுவதாகக் கூறினாலும் உண்மையில் அவ்வாறு துர்நாற்றம் வீசுவதில்லை. இரவில் படுக்கைக்குச் செல்லும் முன் பல் துலக்காமல் இருப்பின் காலையில் நித்திரையிலிருந்து எழுந்தவுடன் உணவுத்துணிக்கைகள் பற்களில் சிக்கியிருக்கும்போது வாயில் துர்நாற்றம் வீசுவது சகஜமாகும். அவ்வாறே நீர், உணவுகளை முறையாக உட்கொள்ளாது இருந்தாலும் சிலருக்கு வாய் துர்நாற்றம் வீசும்.

### வாயில் துர்நாற்றம் வீசுவதற்கான காரணங்கள் சில

* குழியான பூச்சிப்பற்கள் இருக்கின்றமை.
* எச்சில் சுரப்பு குறைவடைதல். எச்சிலானது வாய் சுகாதாரத்தைப் பாதுகாக்க உதவுகின்றது. அதன் நீர்த்தன்மையினால் வாயில் உள்ள அழுக்குகள் கழுவப்படுகின்றன. அதில் கிருமிநாசினித் தன்மைகள் உள்ளன. எச்சில் சுரப்புக் குறைவடைந்தவுடன் கிருமிகள் வளர்ச்சியடைந்து பற்களுக்கிடையில் உள்ள உணவுத்துணிக்கைகளில் புரதத்தை அழித்து, துர்நாற்றம் ஏற்படுத்தக்கூடிய வாயுவை உருவாக்குகின்றது.

### எச்சில் சுரப்பு குறைவடையக் காரணங்கள்

* உறக்கத்தின் போது மன அழுத்தம் ஏற்படல்.
* வாய்ப் புண், உள்நாக்கு அழற்சி, முரசு கரைதல்போன்ற சில குறிப்பிட்ட நோய்களின் பாதிப்பு.



## தொண்டை அடிக்கடி வலிப்பது ஏன்?

சிலரின் தொண்டையில் அடிக்கடி வலி ஏற்படும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. உங்களில் சிலருக்கு அடிக்கடி சளித்தொல்லை ஏற்படக்கூடும். இதுவும் கிருமித் தொற்றினால் ஏற்படும் ஒருவித நோயாகும். தொண்டைப்பகுதியில் உள்ள உள் நாக்குப் பகுதியே எம்மை கிருமித் தொற்றுகளிலிருந்து பாதுகாக்கின்றது.




'வைரஸ்' தொற்றினால் தொண்டைப்பகுதியில் வலி ஏற்படக்கூடும். அவ்வாறே, ஸ்ட்ரெப்டோகோஸ் எனும் பக்றீரியாவினால் உள்நாக்கு அழற்சி ஏற்படுகின்றது. தொண்டைப்பகுதியினை கழுவுதல் மற்றும் அதற்குரிய மருந்துகளை எடுப்பதன் மூலம் இந்த நோயைக் குணப்படுத்திக் கொள்ள முடியும். தொண்டைப் பகுதி வலிக்கும் போதெல்லாம் மருத்துவரிடம் காட்டி அது உள்நாக்கு அழற்சிதானா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## தொண்டையில் முள் சிக்கினால்...

முட்கள் கொண்ட சிறிய மீன் வகைகளை உட்கொள்ளும் போது அச்சிறிய முட்கள் தொண்டையில் சிக்கி விடக்கூடும். இதற்காக பதற்றமடையாதீர்கள். தொண்டைக்குள் விரலை விட்டு வாந்தி எடுக்க முற்படாதீர்கள். மாறாக, கண்-காது-மூக்கு மருத்துவரை உடனடியாக நாடுங்கள். முள் தொண்டைக்குள் சிக்கிய பின்னர் உணவு எதனையும் உட்கொள்ளாதீர்கள். சில வேளைகளில், முள் தொண்டையில் இல்லாத போதிலும் அது குத்திய இடம் புண்ணாகியிருப்பதனால் வலி ஏற்படக்கூடும். இவ்வாறு வலி ஏற்பட்டால் மருத்துவரை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். தொண்டையில் முள் சிக்கியிருந்தால் அதனை அப்புறப்படுத்தாமல் இருப்பது ஆபத்தானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்திலிருந்து மீள்வது இப்படித்தான்...!



"மகனே சாப்பிட்டு முடிந்து விட்டால் யோகட் கோப்பையை குப்பையில் கொண்டு போய் வீசி விடுங்கள்"

"அம்மா அதனை நான் கானுக்குள் வீசி விட்டேன்"

"நீங்கள் தவறு செய்திருக்கின்றீர்கள். அந்த கோப்பைக்குள் தண்ணீர் நிரம்பியதும் நுளம்புகள் அதில் பெருகி விடும்"

"அதுவும் உண்மைதான். பொலித்தீன், சிரட்டைகள் என்பன நிரம்பியவுடன் கான்கள் அடைத்துக் கொள்ளும். அப்பொழுது வடிகானில் தண்ணீர் வழிந்தோடாது. சிறிதளவு மழை பெய்தாலும் வீதிகள் தண்ணீரில் மூழ்கி விடுகின்றன. வீடுகளும் தண்ணீரில் மூழ்கி விடுகின்றன" என்று கடை முதலாளி கூறினார்.

"வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் தொற்று நோய்களினால் பாதிக்கப்படுவதும் நாமே. இப்பொழுது எனக்கு புரிகின்றது அம்மா. நான் மீண்டும் அவ்வாறான தவறுகளை செய்யமாட்டேன்"

## வெள்ளப் பெருக்கு என்றால் என்ன?

மழைக்காலத்தில் ஆறுகள் பெருக்கெடுப்பதனால் ஏற்படும் பாதிப்பினையே வெள்ளப் பெருக்கு என்று கூறுகின்றனர். எமது நாட்டில் மூன்று விதங்களில் வெள்ளப் பெருக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

1. மழைவீழ்ச்சி அதிகமாகி ஆறுகள் பெருக்கெடுப்பதனால் ஏற்படும் பாதிப்புகள்.
2. குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆறுகளில் நீர்மட்டம் உயர்வதனால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு.
3. எதிர்பாராமல் ஏற்படும் சூறாவளி புயல் காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கு நிலை.

பண்டைய காலத்தில் ஆறு பெருக்கெடுக்கும் போது தாழ்ப் பகுதி நிலங்களே பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆனால், இன்று நிலைமை அவ்வாறில்லை. திட்டமிடாமல் அமைக்கப்படும் நகரங்கள் பெருந்தெருக்கள் என்பனவும் வெள்ளப்பெருக்கினால் பாதிப்புக்குள்ளாகின்றன.

இந்த ஆண்டு பலமுறை நாம் வெள்ளப்பெருக்கு பாதிப்பை சந்தித்திருக்கின்றோம். மேற்கூறப்பட்ட காரணங்களை விட உலகின் தட்பவெப்ப நிலைகளில் ஏற்படும் மாற்றங்களும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால், மழைவீழ்ச்சியிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது வெள்ளம் ஏற்படக் காரணமாகும்.

## வெள்ளப் பாதிப்பின் அளவு

**சிறிய வெள்ளப் பாதிப்பு**-தண்ணீர் 5 அடிக்கும் 8 அடிக்கும் இடையில் இருக்குமாயின் இது சிறியளவு வெள்ளப் பாதிப்பு என்று கருதப்படுகின்றது.

**பெரு வெள்ளப் பாதிப்பு**-தண்ணீர் 8 அடிக்கும் 11 அடிக்கும் இடையில் இருத்தல்.

**பேரழிவு வெள்ளம்**-11 அடிக்கு அதிகமாக தண்ணீர் இருக்குமாயின் அது பேரழிவினை ஏற்படுத்தும் வெள்ளப் பெருக்காகும்.

## வெள்ளத்தினால் பாதிப்பினை எதிர்நோக்குவோர்

* ஆறு சார்ந்த தாழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களும் அவர்களின் வசிப்பிடங்களும் சொத்துக்களும்.
* உரிய திட்டமிட்டல்களுக்குள்ளாகாத அபிவிருத்திப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும், அவர்களின் நிறுவனங்களும் சொத்துக்களும்.
* தாழ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கையும் இதர பெருந் தெருக்கள், நிறுவனங்கள் போன்றனவும். எமது நாட்டில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு நிலையில் அதிகளவில் பாதிப்பினை எதிர்நோக்குவது ஈரலிப்பான பிரதேசங்களாகும்.இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி ஆகிய பிரதேசங்கள் அடிக்கடி வெள்ளப் பாதிப்புக்குள்ளாகின்றன. எனினும், வருட இறுதிப்பகுதியில் ஏற்படும் பருவப்பெயர்ச்சி மழை வறண்ட பகுதிகளிலும் வெள்ளப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. 1947, 1989 மற்றும் 2002 காலப்பகுதிகளில் மிக மோசமான பாதிப்பினை ஏற்படுத்திய வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டுள்ளன.

## வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள்

* மலைச் சரிவுகள் சுத்தப்படுத்தப்படுவதனால் மண் கழுவிச் செல்கின்றமை. இந்த மண் ஆற்று உள்பகுதிகளில் சேர்வதனால் ஆற்றின் தண்ணீர்க் கொள்ளளவு குறைவடைகின்றது. அதன்போது ஆறு பெருக்கெடுக்கின்றது.
* ஆற்றில் இருந்து மண் அதிகளவில் அகழப்படுவதனால்.
* ஆற்றுக் கரையோரங்களில் சட்ட விரோத குடியிருப்புகள்.
* தண்ணீர் வடிந்தோடும் வாய்க்கால்கள் அடைபடுகின்றமை.
* தண்ணீர் வழிகளை அடைக்கும் வகையில் நிலங்களை அகழுதல்.
* தாழ் நிலப்பகுதிகளை அகழுதல்.
* தண்ணீர் வடிந்தோடும் வாய்க்கால்களை சரியாகப் பராமரிக்காமை.
* சரியான திட்டமிடல் அற்ற நகரமயமாக்கம்.

இலங்கையில் நீர்ப்பாசனத் திணைக்களமே வெள்ளப் பெருக்கு சம்பந்தமாக செயற்படுகின்றது. வெள்ளப் பெருக்கு அபாயம் குறித்து ஊடகங்களில் அறிவிக்கப்படுகின்றன.

## நீங்கள் வெள்ள அபாயப் பிரதேசத்தில் வசிப்பவரா?

* வீட்டில் இருக்கும் பெறுமதியான பொருட்களை பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்.
* பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பணம், புத்தகங்கள், உலர் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய உடைகள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு விரைவாக பாதுகாப்பான இடத்திற்கு சென்று விடுங்கள்.
* அவசர நேரத்தின் போது பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் அத்தியாவசிய ஆவணங்கள் அடங்கிய பொதியை தயாராக வைத்திருங்கள்.

## வெள்ளம் ஏற்பட்டிருக்கும்போது....

* வெள்ளப் பெருக்குள்ள பகுதிகளுக்கு வாகனத்திலோ கால்நடையாகவோ பயணம் செய்யாதீர்கள்.
* ஓடும் தண்ணீர் உள்ள பகுதிகளுக்கு செல்வதனை தவிர்த்து விடுங்கள்.
* கீழே விழுந்திருக்கும் மின் கம்பங்கள், மின் கம்பிகள் இருக்கும் பகுதிகளுக்கு செல்லாதீர்கள்.
* வெள்ளப் பாதிப்புக்குள்ளான உணவுப் பொருட்கள் எதனையும் உட்கொள்ளாதீர்கள்.

## வெள்ளப் பெருக்கின் பின்னர்

* தண்ணீர் அசுத்தமடைந்திருக்கும் என்பதால் அத்தண்ணீரை அருந்தவோ, உணவு சமைக்கவோ பயன்படுத்தாதீர்கள்.
* அந்த தண்ணீரைக் குடிப்பதனால் தொற்று நோய்களுக்குள்ளாக நேரிடும்.
* குளோரின் போன்ற ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி தண்ணீரை சுத்தப்படுத்துங்கள்.

## வெள்ளப் பெருக்கு எந்தக் காலப்பகுதியில் ஏற்படும்?

இலங்கைக்கு பருவப்பெயர்ச்சி மழையினாலேயே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது.

தாழ் நிலப்பகுதியில், ஆற்றுக் கரைப்பகுதியில் சரியான திட்டமிட்ட அபிவிருத்தி இல்லாத நகரங்களில் நீங்கள் வசிப்பவராயின் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். அதனால், மழைவீழ்ச்சி குறித்தும் ஆற்று நீர்மட்டம் குறித்தும் முழு அவதானத்துடன் இருங்கள். வெள்ளப் பெருக்கு ஏற்படுவதில் மனிதரின் செயற்பாடும் நேரடிப் பங்களிப்பு செய்கின்றது என்பதனை உணர்ந்து நீங்கள் வாழும் சூழல் குறித்து விழிப்புணர்வுடன் இருங்கள்.

தண்ணீர் வடிந்தோடும் வாய்க்கால்களைப் பராமரிக்க மறந்து விடாதீர்கள். உங்கள் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத நகரமயமாக்கல் செயற்பாடுகள் குறித்தும் அவதானத்துடன் இருங்கள்.

அனர்த்தத்தின்போது மிகவும் பாதுகாப்பான இடத்திற்கு செல்வது உங்களுக்கு பாதுகாப்பாக அமையும்.



இயற்கை அனர்த்தம் ஒன்றினை சந்தித்த போது நீங்களோ அல்லது உங்களைச் சேர்ந்த நபரோ முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து மிகச் சுருக்கமாக 50-100 சொற்களில் எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கத்தை எழுதி அனுப்புவோருக்கு பெறுமதியான புத்தகப் பொதி ஒன்று பரிசாக வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி :


அனர்த்தங்களைத் தவிர்ப்போம்
ப்றக்டிக்கல் எக்ஷன், இல 5,
லயனல் எதிரிசிங்க மாவத்தை,
கொழும்பு-05.

விசேட அனுசரணை:
PRACTICAL ACTION
Intermediate Technology Development Group
ப்றக்டிக்கல் எக்சன்
இல. 5. லயனல் எதிரிசிங்க மாவத்தை கொழும்பு-5.
தொலைபேசி: 011 2829412 பெக்ஸ்: 011 2856188
மின்னஞ்சல்: Sri Lanka@practicalaction.org.lk
இணையதளம்: www.janathakshan.net
www.practicalaction.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டியுனீசியா






## அமைவிடம்

வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள டியுனீசியா ஒரு குடியரசாகும். மத்தியதரைக்கடலோரத்தில் அமைந்துள்ள டியுனீசியாவின் மேற்கில் அல்ஜீரியாவும் தென் கிழக்கில் லிபியாவும் வடக்கில் மத்தியதரைக் கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. ஆபிரிக்க குடாவின் வட எல்லையில் அற்லஸ் மலைத்தொடரில் அமைந்துள்ள மிகச்சிறிய நாடு தான் டியுனீசியாவாகும்.

இது வட ஆபிரிக்காவின் செல்வ வளம் நிறைந்த நாடு. மேற்கத்தியமயமான ஆபிரிக்க நாடுகளில் இதுவும் ஒன்று. ஆட்சி அதிகாரத்திற்கு வசதியாக 24 மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 40% மான பகுதியில் சஹாரா பாலைவனம் பரவிக் காணப்படுகின்றது.

## மதமும் சனத்தொகையும்

டியுனீசியாவின் மொத்த சனத் தொகையில் 98% மானோர் டியுனீசிய அரபு மொழி பேசும் அரேபியர்களாவர். மிகுதி 2% மானோர் ஐரோப்பியர்களும் யூதர் களுமாவர்.

இவர்களின் பிரதான மதமாக இஸ்லாம் மதம் இருப்பதோடு, கிறிஸ்தவர்களும் யூதமதத்தினரும் மிகச் சிறுபான்மையினராக வாழ் கின்றனர்.

## வரலாறு

பாபர் கோத்திரத்தார்களே டியுனீசியாவின் ஆரம்பக் குடிகள் என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.கி.மு 10ஆம் நூற்றாண்டில் பினீஷியர்கள் இப்பிரதேசத்தில் குடியேறத் தொடங்கினர்.கி.மு 9 ஆம் நூற்றாண்டில் காத்தீஜ் எனும் நகர் நிறுவப்பட்டு,அங்கு இன்றைய லெபனான் என குறிப்பிடப்படும் டையர் கோத்திரமக்கள் குடியேறத் தொடங்கினர். பின்னர் கி.மு 5 ஆம் நூற்றாண்டில் இருந்து காத்தீஜ் பிரதேசமானது மேற்கு மத்தியதரை பிரதேச 'அக்ரஸ்த' நாகரிகத்திற்கு உட்பட்டது. அதனால், காத்தீஜ் நகரை அழிப்பதற்காக காத்தீஜ் நக ரிற்கும் ரோமாபுரிக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகியது. இந்த யுத்தங்களின் பிரதிபலனாக இறுதியில் கி.மு 2 ஆம் நூற்றாண்டில் ரோமாபுரி காத்தீஜ் நகரை வெற்றி கொண்டது. அதன்பின் இந்தப் பிரதேசம் ரோமப் பேரரசின் தானியக் களஞ்சியமாக மாறியதுடன், இலத்தீன் மொழியும் கிறிஸ்தவ மதமும் பரவியது. கி.பி 5 ஆம் நூற்றண்டில் அரேபியர்களாலும் இப்பிரதேசம் ஆக்கிரமிக்கப் பட்ட பொழுதிலும் பாபர் மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பால் முஸ்லிம் அரச வம்ச ஆட்சி நிறுத்தப்பட்டது.

1800 ஆம் ஆண்டுகளின் மத்திய பகுதியில் துருக்கியர்களின் ஆட்சியின் கீழ் வந்த டியுனீசியா, பின்னர் பிரான்சிடமிருந்து துருக்கி பெற்ற கடன் தொகை காரணமாக டியுனீசியாவின் ஆட்சி படிப்படியாக பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பின்னர், 1881 மே மாதம் 12 ஆம் திகதி டியுனீசியா பிரான்சின் பாதுகாப்பு பிரதேசமாக கொண்டு வரப் பட்டது. எனினும், 1956 இல் நாட்டு மக்கள் பிரான்சிடமிருந்து தாங்கள் விடுதலை பெற வேண்டும் என போராடியதன் விளைவாக, 1957 ஜூலை 25 ஆம் திகதி டியுனீசியா ஒரு சுதந்திர நாடாக பிரகடனப்படுத் தப்பட்டது.

| | |
|---|---|
| தலைநகர் | : டியுனிஸ் |
| பெரிய நகரம் | : டியுனிஸ் |
| அரச கரும மொழி | : அரபு மொழி |
| அரசு | : குடியரசு |
| மொத்த நிலப்பரப்பு | : 163,610 சதுர கிலோமீற்றர் (இதில் 5% நன்னீர்த் தேக்கமாகும்) |
| நாணயம் | : டியுனீசியன் டினார் |
| நேரம் | : கிரீன்வீச் நேரத்தை விட ஒருமணி நேரம் முன்பதாக |
| இணையத்தள குறியீடு | : .tn |
| சர்வதேச தொலைத்தொடர்பு இலக்கம் | : +216 |

## பொருளாதாரம்

பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மத்திமமான இடத்தை வகித்தாலும் வட ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில் செல்வ வளமுள்ள நாடு என்றே குறிப்பிட வேண்டும். இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய அரைவாசியினர் விவசாயத்தை மேற்கொள்கின்றனர். எனினும், நாட்டின் பொருளாதாரத்தில் சுரங்கக் கைத்தொழில், மின்சக்தி, உல்லாசப் பயணத்துறை மற்றும் பல்வேறு உற்பத்தித் துறைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

எவ்வாறாயினும், நாட்டின் மொத்த உற்பத்தியில் 15% ஆனவை விவசாய உற்பத்தி பொருட்களாகும். ஒலிவ், சோளம், கோதுமை, பார்லி, உருளைக் கிழங்கு, பேரீச்சம் மற்றும் பாதாம் பருப்பு போன்ற விவசாய உற்பத்திகளை டியுனீசிய விவசாய மக்கள் மேற் கொள்கின்றனர். அதே போல் மீன்பிடிக் கைத் தொழிலிலும் இந்நாட்டு மக்கள் பெரிதும் ஈடுபடுவதோடு, அது அந்நாட்டின் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. டியுனீசியாவின் கைத்தொழிலைப் பொறுத்தவரையில் புடைவைக் கைத்தொழில், சுரங்கத்தொழில்,உணவு மற்றும் பான வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெற்றோலியம், பொஸ்பேற், ரசாயன திரவியங்கள், புடைவைகள், தைத்த ஆடைகள் என்பன பெருமளவில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெய்ன் மற்றும் லிபியா ஆகிய நாடுகள் டியுனீசியாவுடன் முக்கியமாக வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்கின்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சொகலட்' வந்த கதை

உலகில் உள்ள அனைவருக்கும் அதிலும் குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமான தின்பண்டங்களுள் சொகலட்டும் ஒன்றாகும். கிறிஸ்டோபர் கொலம்பஸ் 16 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவைக் கண்டு பிடித்தபோது, அங்கு வாழ்ந்து வந்த மக்கள் சொகலட்டுகளைப் பயன்படுத்தி வந்ததைக் கண்டு, பின்னர் ஸ்பெய்ன் நாட்டுக்கு அதனை அறிமுகப் படுத்தியதாகக் கூறப்படுகின்றது.



பழைய சான்றுகளின்படி, சொகலட் கி.பி 1350 ஆம் ஆண்டுகளில் தென் ஆபிரிக்காவில் பயன்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் சொகலட்டுகளை கொகோ காய்களில் இருந்து தயாரித்துள்ளனர். அப்போது அது வெறும் திரவமாகவே பயன்பட்டுள்ளது. பின்னர் ஸ்பெய்ன் நாட்டிலும் இத்திரவப் பொருள் ஓர் உணவாகப் பரவியது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் இது ஸ்பெய்னில் மட்டுமே புழக்கத்தில் இருந்து வந்தது.

பிரான்ஸ் நாட்டில் கி.பி 17 ஆம் நூற்றாண்டில் சொகலட் அறிமுகப்படுத்தப் பட்டபோது, அவர்கள் அதனை அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ளவில்லை. உணவுத்துறை வல்லுனர்கள் அதனை சோதனை செய்து உடல் நலத்திற்குத் தீங்கு ஏதும் விளைவிக்காது என்று உறுதியளித்த பின்னரே 1650 இல் பிரெஞ்ச் அரசு இதனை பொது மக்கள் அருந்துவதற்கான ஒரு பானமாக ஏற்றுக்கொண்டது.

பின்னர், 1657 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் லண்டனிலும் ஐரோப்பாவின் பிற நகரங்களிலும் சொகலட் பானம் விற்கும் கடைகளை ஆரம்பித்துள்ளார். அப்போது இது பணக்காரர்களின் பானமாகக் கருதப்பட்டது.



18 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சொகலட்டை பால் மற்றும் சர்க்கரையுடன் கலந்து ஒரு குளிர்பானமாக அறிமுகப் படுத்தினார். அதனை அடுத்து கெய்லர் என்ற சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சொகலட்டைத் துண்டுகளாகவும் கட்டிகளாகவும் திண்மப் பொருளாகவும் உருவாக்கினார். இதற்கிடையில் காட்பரி சகோதரர்கள் என அழைக்கப்பட்ட புரோஜான் மற்றும் பெஞ்சமின் என்ற இருவரும் பல வடிவங்களில் பல்வேறு பொருட்களை அதனுடன் கலந்து வெவ்வேறு சுவைகளில் சொகலட்டுகளைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

கோஹன்ரிட் ஜே.வான் ஹட்டன் என்ற ஒல்லாந்து நாட்டு வேதியியல் அறிஞர், 1860 ஆம் ஆண்டில் சொகலட் திரவத்தை சொகலட் தூளாக மாற்றக்கூடிய தொழில்நுட்பச் செயல் முறையைக் கண்டுபிடித்தார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மேனியல் பீட்டர் என்பவர் பால் சொகலட்டைத் தயாரிக்கத் தொடங்கினார்.



2 ஆம் உலகப் போரின் போது போர் வீரர்கள் உண்பதற்கென்று பலவகை சொகலட்கள் தயாரிக்கப்பட்டன. தற்போது எமது நாடு உட்பட எல்லா நாடுகளிலும் வகை வகையான சொகலட்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சொகலட் தயாரிப்பு நிறுவனமும் தமது தயாரிப்பே சுவையிலும் ஊட்டத்திலும் சிறந்தது என விளம்பரப்படுத்துகின்றது.

**ஜெ-டிசோகுமார்**

## 2008 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



ரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் சி.சஜிஸ்ணவன், இவ்வாண்டுக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்றுள்ளதோடு, பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் வ.சிவச்சந்திரதேவன்-சி.கிருஷ்ணகுமாரி தம்பதியரின் புதல்வராவார்.

கொழும்பு, அல்-ஹிக்மா கல்லூரியில் கல்வி பயிலும் எம்.ஐ.எம். இக்ராம், இவ்வாண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 129 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் எஸ்.எம்.எம். இஷாக்-எஸ்.எச்.எப்.றழீனா தம்பதியினரின் புதல்வராவார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகளுக்கும் வாசகர்களுக்குமிடைய

# இலங்கை பத்திரிகை மு

பாடசாலை மாணவர்களுக்கு ஊடகத்துறை தொடர்பான அறிவைப் புகட்டும் நோக்கில், தற்போது க.பொ.த (சா/தர) வகுப்பு மாணவர்களுக்கு தகவல் தொடர்பியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொடர்பாடல் ஊடக கற்கை நெறி ஆகிய இரு பாடங்களையும் போதிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதில், தொடர்பாடல் ஊடக கற்கைநெறி தொடர்பிலான பாடம் முழுமையாக ஊடகம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றது.

எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவைப்படும் ஊடகத்துறை தொடர்பான சிறந்த அறிவு பெற்ற ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கிலும் பாடசாலைப் பருவத்தில் இருந்தே தொழில்சார் கற்கை நெறியொன்றை மாணவர்கள் கற்றிருக்க வேண்டும் என்ற நோக்கிலும் இப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இலங்கை முழுவதும் சுமார் 140 பாடசாலைகளில் இப்பாடம் போதிக்கப்படுகின்றது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சாதாரண தரப் பரீட்சையில் இப்பாடத்திற்குரிய பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறுகின்றது.

அத்துடன், கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சா/தர) பரீட்சைக்கான இப்பாட வினாப்பத்திரத்தில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பாக இரண்டு வினாக்கள் இடம்பெற்றிருந்ததால், அதுபற்றி அறிவூட்டும் வகையில் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.




க.பொ.த (சா/த
பாடம் சார்ந்த சி


## பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு

2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நிறுவப்பட்டது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் (Editors Guild of Srilanka), பத்திரிகை வெளியீட்டாளர்கள் சங்கம் (Publishers Association), சுதந்திர ஊடக அமைப்பு (Free Media Movement) ஆகியவற்றின் முயற்சியாக 1998 ஆம் ஆண்டின் கொழும்பு பிரகடனத்திற்கு அமைவாக இந்த ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது.

## கொழும்பு பிரகடனம்

கொழும்பு பிரகடனமானது, 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும். இப்பிரகடனம் ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகிய விடயங்களைப் பற்றி வலியுறுத்துவதோடு, பத்திரிகைத் துறையினருக்காக சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை பற்றியும் குறிப்பிடுகின்றது. அத்தோடு, ஊடக சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் அல்லது கட்டுப்படுத்தும் வகையிலான சட்டங்கள் நடைமுறையில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் அரசியல் யாப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து வெளியீட்டு மற்றும் கருத்தறியும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்படுகின்றது.





## பத்திரிகைத் துறையினருக்கான ஒழுக்கக்கோவை

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையை இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகைத் துறையினருக்கு அறிமுகப்படுத்தி, அமுல்படுத்தி வருகின்றது. இந்த ஒழுக்கக்கோவையானது முக்கியமான 8 பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

**1. சரியான செய்தி வெளியிடல் (Accuracy)**

✱ பிரசுரிக்கப்படும் விடயங்களான செய்தி, தகவல்கள் அல்லது புகைப்படம் என்பன உறுதிப்படுத்தப்பட்டவைகளாகவும் ஆதாரபூர்வமானதாகவும் இருக்க வேண்டும்.

✱ பக்கச்சார்பில்லாமலும் நடுநிலையாகவும் (Balance Reporting) அமைய வேண்டும்.

**2. பிழை திருத்தமும் மன்னிப்புக் கோரலும் (Correction and Appologies)**

✱ பிரசுரிக்கப்பட்ட விடயம் பிழையானது என்று அறியுமிடத்து அல்லது தெரிவிக்கப்படும்போது அதற்கு மன்னிப்புக் கோரல் ஒன்றைப் பிரசுரித்தலும் பிழை திருத்தம் செய்வதும் முக்கியமானதாகும்.

**3. பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்குதல் (Opportunity to Reply)**

**4. ரகசியத்தன்மையைப் பாதுகாத்தல் (Confidential Source)**

**5. பொதுவான செய்தி அறிக்கை மற்றும் எழுதுதல் (General Reporting)**

**6. செய்தித் தேடலின்போது தந்திரமான முறைகளைக் கையாளாதிருத்தல். இதே குறிக்கோளுக்காக செய்திஅல்லது தகவல்களைத் தருபவர்களை தொந்தரவுக்குள்ளாக்காதிருத்தல் (Harassment and Subterfuge)**

**7. ஊடகவியலாளர்கள் இத்தொழிலில் தனிப்பட்ட கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளல். (Dignity)**

**8. பொது நலன் (Public Interest)**

ஆகிய விடயங்கள் பத்திரிகைத் துறையினருக்கான ஒழுக்கக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாகும். இந்த ஒழுக்கக்கோவையை மீறும் வகையில் பிரசுரங்கள் இருக்குமாயின், அது தொடர்பாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

## யாரால் முறைப்பாடு செய்வது?

✱ ஒரு பிரசுரத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களே முறைப்பாடு செய்யத் தகுதி பெறுபவர்களாவர். ஆனால், தனிநபர் அல்லது நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் அமைப்புக்களும் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம். மேலும், முறைப்பாடுகள் எப்போதும் சம்பந்தப்பட்ட தரப்பினரை நேரடியாகப் பாதிப்பதாக அல்லது ஏதேனும் ஒருவகையில் பாதிப்பதாக இருக்கவேண்டும்.

✱ குழந்தைகள் சார்பாக பெற்றோர் முறைப்பாடு செய்யலாம்.

## முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல்

மும்மொழிப் பத்திரிகைகளுக்கும் எதிராக முறைப்பாடு செய்யலாம். மும்மொழிகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கும் பொறுப்பாக மூன்று முறைப்பாட்டு அதிகாரிகள் இந்த ஆணைக்குழுவில் கடமையாற்றுகின்றனர். முறைப்பாடொன்று கிடைத்தவுடன், அந்த முறைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயம் மேலே குறிப்பிடப்பட்ட இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் முன்மொழியப்பட்டு, பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத் துறையினருக்கான ஒழுக்கக் கோவையை மீறும் வகையில் இருக்கின்றதா என்ற விடயத்தை முறைப்பாட்டு அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள். அவ்வாறு மீறுவதாக இருந்தால் அதனை முறைப்பாடாகப் பதிவு செய்து, விசாரணை தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

முறைப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...டயிலான பிணக்குகளைத் தீர்த்து வைக்கும்

# ...றைப்பாட்டு ஆணைக்குழு



கமைய முறைப்பாடொன்றுக்குரிய விடயம் பிரசுரமாகி, இரண்டு வருடத்திற்குட்பட்டதாக இருக்கவேண்டும். இரண்டு வருடத்தைக் கடந்ததாக இருந்தால் அந்தப் பிரசுரம் தொடர்பான முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அத்துடன், குறிப்பிட்ட பிரசுரம் அல்லது முறைப்பாட்டுக்குரிய விடயம் தொடர்பாக ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக இருந்தாலும் அவ்விடயம் தொடர்பான முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

...த (சா/தர) ஊடகத்துறை ...சார்ந்த சிறப்புக் கட்டுரை

முறைப்பாட்டைச் சமர்ப்பிக்க சட்டத்தரணிகள் உதவி எதுவும் தேவைப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவர் நேரடியாக முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கலாம். இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சேவை முற்றிலும் இலவசமானதாகும்.

### மத்தியஸ்த தீர்ப்புச் சபை

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் மத்தியஸ்த தீர்ப்புச் சபை, அதன் தலைவர் உட்பட 11 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது. அதில் ஆறு (06) பேர் (பத்திரிகைத்துறை சாராத) சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் ஏனைய ஐந்து (05) பேர் பத்திரிகைத்துறையைச் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இந்த சபையின் தலைவராக முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் முன்னாள் குறைகேள் அதிகாரியுமான சாம் விஜேசிங்க கடமையாற்றுகின்றார்.

இலங்கையில் வெளிவருகின்ற பத்திரிகைகள், வேறும் பத்திரிகைப் பிரசுரங்களால் பிரசுரிக்கப்படுகின்ற செய்திகள், கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் மூலம் வாசகர்களாகிய பொதுமக்களுக்கு களங்கம், இழுக்கு, பிழையான தகவல்களை வெளியிடல், திட்டமிட்ட அடிப்படையில் தனிமனித சுதந்திரத்தைப் பாதித்திருத்தல், சுய கௌரவத்தைக் கெடுக்கும் வகையில் இருப்பின் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ஏற்படும் அநீதிகளுக்கு எதிராக வாசகர்களாகிய பொதுமக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரித்து, சமாதானப்படுத்தல் (Conciliation), நல்லிணக்கம் ஏற்படுத்தல் (Adjudication) ஆகிய வழிகளில் தீர்வுகளை வழங்கி, இத்தகைய பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் இந்த ஆணைக்குழுவின் பிரதான பணிகளாகும்.

சமாதானப்படுத்தல், நல்லிணக்கம் ஆகிய வழிகளில் தீர்த்து வைக்க முடியாத முறைப்பாடுகள் மத்தியஸ்த தீர்வுக்காக சமர்ப்பிக்கப்படும்.

### மத்தியஸ்த தீர்ப்புச் சபையின் அதிகாரம்

இந்த ஆணைக்குழுவின் தீர்ப்புக்கு பத்திரிகைகள் இணங்காவிட்டால், அடுத்து என்ன செய்யலாம் என்ற வினா எழுகின்றது. முதல் இரு வழிகளிலும் வாசகருக்கு ஏற்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்கும் வகையில் பத்திரிகை பதிலளிக்கும் உரிமை, மன்னிப்புக் கோரல் என்பவற்றுக்கு முன்வராவிட்டால் மூன்றாவது வழிமுறையான மத்தியஸ்த சபையின் தீர்ப்புக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்படும். இந்த சபை 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மத்தியஸ்த சபைச் சட்டத்தின்படி (No:11 of 1995 Arbitration Act), முறைப்பாட்டாளர்களையும் பத்திரிகை ஆசிரியர் அல்லது செய்தி தகவலோடு சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேரடியாக விசாரணை நடத்தி இறுதியாக ஒரு தீர்ப்பை வழங்கும். அந்தத் தீர்ப்பை பத்திரிகை பிரசுரிக்க வேண்டும்.

இந்தத் தீர்ப்பானது உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் செல்லுபடியாகக் கூடியதாகும். இந்தத் தீர்ப்பை ஏற்று பத்திரிகை அதற்கேற்ப திருத்தம், மன்னிப்புக் கோரல் என்பவற்றைப் பிரசுரிக்காவிட்டால் பாதிப்புக்குள்ளாகியுள்ள வாசகராகிய முறைப்பாட்டாளருக்கு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில்லை.

### தொடர்பு கொள்ள...

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலக முகவரி, இல:96 கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு-05 (Press Complaints Commission of Sri Lanka, 96 Kirula Road, Colombo-05)** இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழ் காணும் இலக்கங்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி இல : **011-5353635**, **பெக்ஸ் 011-5335500**, மின்னஞ்சல் முகவரி **pccsl@pccsl.lk**, இணையத் தளம் : **www.pccsl.lk** என்பதாகும்.


இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் ஓர் அங்கமாக இந்த ஆணைக்குழு அமைந்திருகின்றது. பத்திரிகைத்துறையினருக்கு பயிற்சியளிக்கக்கூடிய இதழியல் கல்லூரியும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

ශ්‍රී ලංකා ජනමාධ්‍ය විද්‍යාලය
இலங்கை இதழியல் கல்லூரி
Sri Lanka College of Journalism





# எட்டாக்கனி

எங்கும் பசுமையாகக் காட்சி தரும் மலையகத்தில் ஓர் வசதியற்ற குடும்பம். குடும்பத் தலைவி கனகம். குடும்பத் தலைவன் ராமசாமி காலமாகிப் பல வருடங்களாகி விட்டன. இவர்களுக்கு சுமதி என்னும் ஒரு மகள் இருந்தாள். ராமசாமி இறந்த பின் காலம் கனகத்தைக் கடன்காரியாகவும் அவர்கள் குடும்பத்தை வறுமை யானதாகவும் மாற்றிவிட்டது.

மகள் சுமதி அடுத்த வீட்டு செல்வி பாடசாலைக்குப் போவதைப் பார்த்து ஏங்குவாள். அம்மாவிடம் கேட்பாள். ''அம்மா என்னை எப்போது ஸ்கூலுக்கு அனுப்புவீங்க? அடுத்த வீட்டு செல்வி எவ்வளவு அழகாப் போறா. எனக்கும் ஆசையா இருக்குது அம்மா'' என்பாள். அப்போது கனகம் மன வேதனைப்பட்டாள். ''என் ராசாத்தியே! இன்னும் ஒருமாதம் பொறுத்துக்கோ. அம்மாவுக்கு சம்பளம் கிடைச்சிடும் அப்புறம் அல்லிப் பூ எவ்வளவு வெண்மையா இருக்குமோ அதுபோல நீயும் வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு ஸ்கூலுக்குப் போகலாம்'' என்று கூறி சமாதானப்படுத்துவாள்.




கனகத்திற்கு அவள் மகளைப் பார்க்கும்போது மிக கவலையாகவும் பரிதாபமாகவும் இருக்கும். என்ன செய்ய வறுமை அவளை வாட்டியெடுத்தது.

அன்று சனிக்கிழமை. அம்மா வேலைக்குச் சென்றதும் மகள் சுமதி கவலையுடன் அமர்ந்து இருந்தாள். இன்று எப்படியும் அம்மாவிடம் அடம்பிடித்து நாளை ஸ்கூல் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள்.

அம்மா வாசலில் வரும்போதே ''அம்மா நீ எனக்கு எப்படியாவது வெள்ளைக் கவுனும் புத்தகங்களும் வாங்கித் தரணும்'' என்று கேட்டு அடம் பிடித்தாள்.

என்ன செய்வதென்று தெரியாத கனகம் அவளை கோபத்தில் அடித்து விட்டாள். அவ்வளவுதான் வாசற்படியில் அமர்ந்து கொண்டு அழுது கொண்டிருந்தாள் சுமதி.

இரவாகியது. வாசற்படியில் அமர்ந்திருந்தவாறே சுமதி உறங்கிவிட்டாள். பிறகு கனகம் அவளை தன் மார்போடு அணைத்து தூக்கிக் கொண்டு போய் கிழிந்த சாக்கை விரித்து அதில் தூங்கவிட்டாள். கனகத்திற்கு ஏதோ தலை வலிப்பது போல் இருக்கவே ஒரு கிளாஸ் சாயம் போட்டு குடித்து விட்டு உறங்கப் போனாள். மறுநாள் விடிந்தது. கனகம் படுக்கையை விட்டு எழும்ப முடியாதவளாக இருமிக் கொண்டே படுத்திருந்தாள். சுமதி அடுத்த வீட்டு மாமாவிடம் போய் ''அம்மாவுக்கு ரொம்பக் காய்ச்சல்'' என்று தகவல் சொன்னாள்.

உடனே எஸ்டேட் லொறியில் கனகத்தை ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். ''கடவுளே! அம்மா சுகமாகி வரணும்'' என்று சுமதி பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரம் சென்றவுடன் தகவல் வந்தது கனகம் இறந்துவிட்டாள் என்று. ராமசாமி வறுமையை கனகத்திற்கு கொடுத்து விட்டுச் சென்றான். ஆனால், கனகமோ சுமதியை அநாதையாக்கி விட்டுச் சென்றாள். பாவம்! ஒன்று மட்டும் புரிந்தது. சுமதிக்கு பாடசாலை போவதென்பது 'எட்டாக்கனி'யாக மாறி விட்டதென்பது.

ஏ.லோகலெட்சுமி,
தரம் - 10A,
நு/ஆட்லோ த.வித்.,
அக்கரப்பத்தனை.



# ஏன் இந்த இழிநிலை?

மண் வாசம் உறங்கி
மதி ஒளி தெறித்து
மாலையானதும்
-மதுவை நாடி ஏன்
செல்கிறாய் மனிதா!

மல்லிகை மணக்கும் - மதுவோ
மயக்கும், கண்ணற்றவன்தான்
குருடன் - ஆனால் மதுபானம்
அருந்தியவனோ உயிருள்ள
-சடலம்.

அன்று பத்தடி தூரம் பாய்ந்தன
உந்தன் கால்கள்
இன்றோ பம்பரம் போல்
சுழன்று விழுகின்றனவே!

அன்று எமனையே எதிர்க்கத்
துணிந்தாய் இன்றோ
எறும்பையும் கண்டு
அஞ்சும் நிலை உனக்கு

இதற்கெல்லாம் என்ன காரணம்
சிந்தித்துப் பார் புரியும்
மதுவினால்தான் உனக்கு
இன்று இந்த இழிநிலை.

மண்ணுலகில் மாந்தரெல்லாம்
மகிமையுடன் வாழ்ந்திட
மாறிடுவாய் இன்றோடு
மதுவை இனி மறந்திடுவாயே!

வி.கிருஸ்ணவேணி,
தரம் - 10A,
நு/புனித அந்தோனியார் கல்.,
பிளக்பூல், நுவரெலியா.

# துணிவு தந்த பரிசு

அது ஒரு பாழடைந்த மாளிகை. அம்மாளிகையை எவரும் கவனிக்காமையினால் மாளிகையினுள் செடிகொடிகள் வளர்ந்து காணப்பட்டன. அக்கிராமத்தின் மூத்தோர்கள் அம்மாளிகையினுள் ஒரு ஏட்டுச்சுவடி உள்ளது என்றும் அதில் அம்மாளிகை பற்றிய முழு ஆதாரங்களும் உள்ளன என்றும் ஒரு கட்டுக் கதையை பரப்பி விட்டனர். அதை அறிவதற்கு பலரும் முயற்சி செய்தும்



உள்ளே செல்லப் பயம் காரணமாக எதுவித பயனும் ஏற்படவில்லை. எனினும், புத்திசாலியும் தைரியசாலியுமான மாணவன் சுரேஷ் இந்த மாளிகையினுள் புதைந்துள்ள ரகசியங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று எண்ணம் கொண்டான்.

ஒரு பௌர்ணமி நாள் இரவு தன் எண்ணத்தை செயல்படுத்த எண்ணி அங்கு சென்றான். முழு நிலா வெளிச்சம் அவனின் முயற்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இரவு 10 மணியளவில் தனியாக அம் மாளிகைக்குள் சென்றான். மனதில் ஒரு பயமும் வெற்றி பெறும் மகிழ்ச்சியும் அவனிடம் காணப்பட்டன. முதியோர்கள் கூறிய கதையின் உண்மை என்ன என்பதை அறிவதே அவன் நோக்கமாக இருந்தது. மாளிகையின் உள்ளே



நுழைந்த சுரேஷ் எங்கு தேடியும் ஏட்டுச் சுவடிகள் இல்லை என்பதை அறிந்தான். ஆயினும், அவனது முயற்சியின் பயனாக அம்மாளிகையின் செல்வங்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டான். பெரும் தொகையான தங்கம், வைரம், வைடூரியம், இரத்தினம் என்று செல்வங்கள் புதைந்திருந்த இடத்தைப் பார்த்துப் பூரித்துப் போனான். விலைமதிக்க முடியாத அந்த செல்வங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று நினைத்தான். அதன்படி மறுநாள் காவல்துறை அதிகாரிகளுடன் மாளிகையினுள் சென்று செல்வங்கள் இருக்கும் இடத்தைக் காட்டினான். கட்டுக்கதையை ஆராயச் சென்ற சிறுவனான சுரேஷுக்கு அரசாங்கத்திடமிருந்து பரிசுகளும் பாராட்டுகளும் கிடைத்ததோடு ஊர்மக்கள் மத்தியில் நன்மதிப்பும் கிடைத்தது.

ராஜி கோகிலகிருஸ்ணன், தரம் - 9A, நு/டயகம த.வித்.,

# சிந்தனைத் துளிகள்

* நல்லவற்றை பாறையில் எழுது, தீயவற்றை பனிக்கட்டியில் எழுது.
* கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே பிரதானம்.
* குறைவாகப் பேசு அதிகமாகக் கேள்.
* அதிகமாக ஆடுபவன் ஒருநாள் அடங்குவான்.
* அறிவுதான் தலைக்கு கிரீடம்.
* ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.
* கல்வி என்பது ஏணி அதில் ஏறுபவன்தான் ஞானி.

தொகுப்பு: பி.பிறேமப்பிரியா,
தரம் - 10, நு/திம்புள்ள த.ம.வித்., பத்தனை.

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.................................
முகவரி:...............................
........................................
பாடசாலை:............................
வகுப்பு:................................
திகதி:..................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம் .ஐ .எம் .ஷஹீட்,
தரம் -$5^{B}$,
அல்-அஸ்ஹர் ம கல்.,
திஹாரிய,




ர.சுதர்சன்,
தரம் - $7^{A}$,
சென் பெனடிக் கல்.,
வத்தளை.



க.அபிலாஷ்,
தரம் - $8^{C}$,
விபுலானந்தா மத்திய.கல்.,
காரைதீவு.



எஸ்.எப்.சுமையா,தரம் - 8,
பு/எருக்கலம்பிட்டி
மு.ம.வித்., புத்தளம்.




ப . கிரேஷானி,
தரம் -5,
நோர்வூட் தமிழ் ம.வித்.,
நோர்வூட்.



இரா.ஜவானீசன், தரம் - $9^{F}$,
யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.



இஸ்மாத்கமால் நஸ்பா,
தரம் - $7^{A}$,
அல்-ப்ஹ்ரியா மத்திய
கல்.,
பாணந்துறை.



எஸ்.எம்.ஸஃப்ரான்,
தரம் - $4^{B}$,
நுரைச்சோலை ம.ம.வித்.,
நுரைச்சோலை.



இறக்குவானை, டெல்வின் 'A' பிரிவைச் சேர்ந்த செல்வராஜ்-நித்தியதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன் தர்ஷாந்த் (சஞ்ஜை), தனது ஆறாவது பிறந்த தினத்தை 02.12.2008 அன்று தனது அம்மம்மா வீட்டில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை பெற்றோர் உட்பட உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எம்.லோச்சந்திரன்-மாமா)



அக்கரைப்பற்று 01 ஆம் குறிச்சியைச் சேர்ந்த நபீல் (வைத்தியர்)-தஸ்ரிபா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அலிஸா, தனது ஐந்தாவது பிறந்த தினத்தை 08.12.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகிறார்கள்.

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

பதுளை,பாலகம வீதியைச் சேர்ந்த ஜெகநாத்-ராஜினி தம்பதியரின் அன்பு புதல்வி ஜெ.அக்ஷித்தா, தனது இரண்டாவது பிறந்த தினத்தை 04.12.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.





புளத்சிங்களையைச் சேர்ந்த கனகராஜா-விஜி தம்பதியரின் செல்வப்புதல்வி டேனுஷா, தனது பதினான்காவது பிறந்த நாளை 28.11.2008 அன்று கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரியம்மனின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



அங்.இல : 2283

எம்.எஸ்.எம்.றிகாஷ்,
தரம் - $6^{A}$,
அல்-அக்ஷா ம.வித்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2284

ஆ.பிறேமிளா,
தரம் - 8,
சரஸ்வதி வித்.,
திருகோணமலை.



அங்.இல : 2285

கெல்வின் என்ரூ,
தரம் - $7^{T}$,
புனித அந்தோனியார் கல்.,
கண்டி.



அங்.இல : 2286

ஏ.எச்.எஃப்.பாஹிமா,
தரம் -12,
பாலிகா மு.ம.வித்.,
அக்குறனை.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2287

எசின்ஸ் குரூஸ்,
தரம் - $3^{B}$,
தமிழ் மத்திய.ம.வித்.,
வவுனியா .



அங்.இல : 2288

என்.ஏ.என்.ரஹ்மான்,
தரம் - $8^{A}$,
அல்-முபாரக் தே.பா.,
மள்வானை.



அங்.இல : 2289

எம்.எச்.எம்.அக்ரம்,
தரம் - 11,
ப/கந்துருதெக மு.வித்.,
குருத்தலாவை.




அங்.இல : 2290

ஜே.எம்.ஆஸிக்,
தரம் - 8,
மட்/தேசிய பாட.,
ஓட்டமாவடி.



அங்.இல : 2291

ஏ.எஸ்.எம்.ரம்ஸி,
தரம் - $8^{D}$,
அந்-நூர் மு.ம.கல்.,
பாணகமுவ.



அங்.இல : 2292

எம்.றிபான்,
தரம் - 11,
மஜீதிய்யா அரபுக் கல்.,
பொலன்னறுவை.



அங்.இல : 2293

எம்.மபாஸ்,
தரம் - $11^{C}$,
அல்-மனார் ம.கல்.,
ஹந்தஸ்ஸ.



அங்.இல : 2294

கோ.ஜெகதீஸ்,
தரம்- 9,
நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்.,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் பாட்டிக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආච්චි: දුව මෙහේ එන්න.
துவ மெஹே என்ன.
பாட்டி: மகள் இங்கே வாங்க.

දුව: ඇයි ආච්චි මොනවද ඕනේ?
எய் ஆச்சி மொனவத ஓணே?
மகள்: ஏன் பாட்டி என்ன வேணும்?

ආච්චි: මගේ කෝටුව කෝ?
மகே கோட்டுவ கோ?
பாட்டி: என்னுடைய தடி எங்கே?



දුව: කෝටුව ඇයි ආච්චි?
கோட்டுவ எய் ஆச்சி?
மகள்: தடி ஏன் பாட்டி?

එළියට යන්න ඕනේද?
எளியட்ட யன்ன ஓணேத?
வெளியே போக வேணுமா?

ආච්චි: ඔව් දුව, එළියට යන්න ඕනේ.
ஒவ் துவ, எளியட்ட யன்ன ஓணே.
பாட்டி: ஆம் மகள், வெளியே போக வேணும்.

දුව: මෙන්න ආච්චි කෝටුව.
மென்ன ஆச்சி கோட்டுவ.
மகள்: இந்தாங்க பாட்டி தடி.

මේ කෝටුව හරි බරයි.
மே கோட்டுவ ஹறி பறய்.
இந்தத் தடி சரியான பாரம்.

ආච්චි: බර කෝටුව තමා හොඳ.
பற கோட்டுவ தமா ஹொந்த.
பாட்டி: பாரமான தடிதான் நல்லது.



දුව: එළියේ වැස්ස ආච්චි.
எளியே வெஸ்ஸ ஆச்சி.
மகள்: வெளியில் மழை பாட்டி.

ටික වෙලාවක් ඇතුළේ ඉන්න.
டிக வேளாவக் எதுளே இன்ன.
கொஞ்சம் நேரம் உள்ளே இருங்க.

මම කෝපි අරගෙන එන්නම්.
மம கோப்பி அறகென என்னம்.
நான் கோப்பி கொண்டு வாரேன்.

ආච්චි: හොඳයි දුව.
ஹொந்தய் துவ.
பாட்டி: நல்லது மகள்.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: மகள் இங்கே வாங்க.
දුව මෙහේ එන්න.

i. என்னுடைய தடி எங்கே?
..........

ii. நான் வெளியே போக வேணும்.
..........

iii. இந்தத் தடி சரியான பாரம்.
..........

iv. கொஞ்சம் நேரம் உள்ளே இருங்க.
..........






'is' எனும் துணைவினைச் சொல் (Auxiliary Verb) சகிதம் நிகழ்கால எச்ச வினைச்சொல் (Present Participle) அதாவது 'ing' சேர்ந்த வினைச்சொற்கள் கையாளப்பட்டு அமைக்கப்பட்ட மேலும் சில வாக்கியங்களை இங்கே பயில்வோம்.

(அ) He is writing.
அவன் எழுதிக்கொண்டு இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) She is drawing.
அவள் வரைந்துகொண்டு இருக்கின்றாள். (பெண்பால்)

(இ) It is barking.
அது குரைத்துக்கொண்டு இருக்கின்றது. (ஒன்றன்பால்)

---

✱ மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) He is writing a letter.
அவன் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருக்கின்றான்.

(ஆ) She is drawing a picture.
அவள் ஒரு படம் வரைந்துகொண்டு இருக்கின்றாள்.

(இ) It is barking at you.
அது உன்மீது குரைத்துக்கொண்டு இருக்கின்றது.

---

✱ மேலும் வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) He is eating.
அவன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்றான்.

(ஆ) He is reading a newspaper.
அவன் ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருக்கின்றான்.

(அ) She is drinking.
அவள் குடித்துக்கொண்டு இருக்கின்றாள்.

(ஆ) She is drinking coffee.
அவள் கோப்பி குடித்துக்கொண்டு இருக்கின்றாள்.

(அ) It is sleeping.
அது உறங்கிக்கொண்டு இருக்கின்றது.

(ஆ) It is sleeping on the floor.
அது நிலத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்றது.

✱ பிரதிப்பெயர்ச் சொற்களுக்குப் (Pronouns) பதிலாக பெயர்ச்சொற்களை (Nouns) எழுவாய் பகுதியில் கையாண்டு, அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Nimal is.
நிமால் இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) Nimal is in the class.
நிமால் வகுப்பில் இருக்கின்றான்.

(அ) Mary is.
மேரி இருக்கின்றாள். (பெண்பால்)

(ஆ) Mary is at home.
மேரி வீட்டில் இருக்கின்றாள்.

(அ) The dog is.
அந்த நாய் இருக்கின்றது. (ஒன்றன்பால்)

(ஆ) The dog is in the garden.
அந்த நாய் தோட்டத்தில் இருக்கின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# தலாய்லாமாவை சந்தித்தமைக்கு பிரான்ஸ் மீது சீனா அதிருப்தி!





திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவை சந்தித்துப் பேசியமைக்காக பிரான்ஸ் ஜனாதிபதி நீக்கலஸ் சர்கோனிக்கு சீன அரசாங்கம் தனது அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பின் காரணமாக சீனா-பிரான்ஸ் நாடுகளுக்கிடையேயான உறவுகளில் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சரான ஹே யேஷர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை வகிக்கின்ற பிரான்ஸ் ஜனாதிபதி போலந்து நாட்டில் அண்மையில் தலாய் லாமாவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதனையிட்டே சீனா தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது. இதற்கு பதிலளித்துள்ள பிரான்ஸ் மனித உரிமைகள் விவகார அமைச்சர் ராமா யாதே. சீனா இதனையிட்டு அலட்டிக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சீனா தெரிவிப்பது போல் தலாய் லாமா ஒரு கடும்போக்காளர் அல்ல என்றும், அவர் 'நொபெல்' விருதை வென்ற அமைதியையும் அகிம்சையையும் விரும்புகின்ற ஓர் ஆன்மீகவாதி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முகாபேக்கு எதிராக உலக நாடுகள் செயற்பட வேண்டும்

-பேராயர் டுட்டு

சிம்பாப்வே ஜனாதிபதியை பதவியிலிருந்து விலகுமாறு சர்வதேச நாடுகள் கட்டாயப்படுத்த வேண்டும் என்று 'நொபெல்' விருதை வென்ற பேராயர் டெஸ்மன் டுட்டு தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தின் தொலைக்காட்சி சேவையொன்றில் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்ட போதே இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார். மனித உரிமைகளை மீறியவாறு நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றமைக்காக முகாபேயை பதவியிலிருந்து விலகுமாறு உலக நாடுகள் உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள அவர் நியாயமான முறையில் கேட்கப்படும் வேண்டுகோளை முகாபே ஏற்றுக்கொள்ள மறுத்தாரானால் இராணுவ பலத்தைக் கொண்டு அவரை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



முகாபே

## தாய்லாந்தில் மாற்று வழியில் ஆட்சி அமைக்கும் முயற்சிகள்

தாய்லாந்து நாட்டில் நீதிமன்ற உத்தரவிற்கமைய அந்நாட்டின் ஆளுங்கட்சிக்கு எதிராகத் தடை விதிக்கப்பட்டமையால் ஆளுங்கட்சியில் இடம் பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வேறொரு பெயர் கொண்ட கட்சியொன்றை புதுப்பித்து அக்கட்சியின் வழியே மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு திட்டமிட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கத்தைக் கலைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது இந்த உத்தரவிற்கு அமைய ஆளும் கட்சியிலிருந்த சில உறுப்பினர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு நாடாளுமன்றப் பதவி வகிக்கமுடியாது என்றும் தடை விதிக்கப்பட்டது. எனவே, இவ்வாறு குறித்த தடைக்கு ஆளாகாத மிகுதி உறுப்பினர்களே இவ்வாறு புதிய கட்சியினூடாக ஆட்சி அமைக்க முயற்சி செய்வதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

தாய்லாந்து அரசாங்கத்தைக் கலைக்குமாறு கோரி அந்நாட்டின் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நீண்ட நாட்களாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்ததுடன், விமானப் போக்குவரத்துக்களையும் தடுத்திருந்தனர். இத்தகைய பின்னணியில் நீதிமன்றத்தினால் அரசாங்கத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இதேவேளை, தாய்லாந்தில் நிலவுகின்ற அரசியல் கொந்தளிப்புக்கள் முடிவிற்கு வரா விட்டால் நாட்டின் அரசியலமைப்பு முறையினை தடை செய்துவிட்டு, நீதியரசர்களினால் இடைக்கால ஆட்சிப் பரிபாலனமொன்றை மேற்கொள்ளும் திட்டமொன்றையும் நீதிமன்றம் கொண்டிருப்பதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

## அற்லஸ் கேள்வி - 182

**கேள்வி:** தாய்லாந்தில் ஆளுங்கட்சியிலிருந்த உறுப்பினர்கள் நாடாளுமன்ற பதவி வகிப்பதற்கு எத்தனை ஆண்டு காலம் தடை விதிக்கப்பட்டுள்ளது?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 182,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 180 இன் சரியான விடை: 21 நாடுகள்**

பரிசு பெறுவோர்

ஏ.ஞானஉதயமேரி,
எல்ஜின், லிந்துல.

எம்.அஷிஃபலி,
67/B, பல்லியவெல,பொல்கொல்ல,
கண்டி.

எஸ்.அருண் அபிஷேக்,
35/22, ஞானவிமல வீதி, தெமட்டகொடை.

## சிம்பாப்வேயில் பரவி வரும் 'கொலரா' வியாதி



சிம்பாப்வேயில் தீவிரமாக 'கொலரா' வியாதி பரவி வருவதன் காரணமாக இதுவரையில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்திருப்பதுடன், ஏராளமானோர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

நிலைமை இப்படியிருக்கையில் சிம்பாப்வே தொழிற்சங்கங்கள், மருத்துவர்கள், தாதிமார்கள் ஆர்ப்பட்டங்களை நடத்தியுள்ளமையால் அவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

மக்கள் வறுமையில் வாடுவதனைச் சுட்டிக்காட்டி தொழிற்சங்கங்கள் ஆர்ப்பட்டங்களை நடத்திய அதேவேளை, வைத்தியர்களும், தாதிமாரும் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 'கொலரா' வியாதி வேகமாகப் பரவி வருவதனால் தாம் கடுமையாக சேவையாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் அதன் காரணமாகவே அந்த கடின உழைப்பிற்கேற்ப சம்பள உயர்வையும் வழங்குமாறு கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குள் பிரவேசித்தால்...



**நீங்கள் விஞ்ஞானப் பாடத்தின் தேவைகளுக்காக ஆய்வுகூடத்தினைப் பயன்படுத்துபவராகவும் அங்கு பலதரப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்பவராகவும் இருக்கலாம். அதற்காக பல தரப்பட்ட ரசாயன பதார்த்தங்களையும் விஞ்ஞானப் பொருட்களையும் நீங்கள் பயன்படுத்த வேண்டி நேரலாம்.**

**இதன்போது, நீங்கள் எதிர்நோக்கக்கூடிய ஆபத்துகள் அதிகமாகும். ஆய்வுகூடங்களில் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குமுறை உள்ளது. சரியான உபகரணங்களைக் கொண்டு, சரியான நடைமுறைகளைப் பின்பற்றி, சரியான ஆய்வுகளை மேற்கொள்ள உங்களுக்கு அறிவாற்றல் இருக்கவேண்டும்.**



## விஞ்ஞான கூடத்தின் வகைகள்



பொதுவாக விஞ்ஞான ஆய்வுகூடங்களை மூன்றாக வகைப்படுத்தலாம். ரசாயன விஞ்ஞான ஆய்வுகூடம், பௌதீக விஞ்ஞான ஆய்வுகூடம், உயிரியல் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பனவே அவை. இவற்றில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவையாகும்.ரசாயனப் பொருட்கள் ரசாயன ஆய்வுகூடத்தில் பரிசீலிக்கப்படும். பௌதீகவியல் அம்சங்கள் குறித்து பௌதீக விஞ்ஞான ஆய்வுகூடத்தில் ஆராயப்படும். விலங்கினங்கள், தாவரங்கள் தொடர்பான ஆய்வுகள் உயிரியல் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் நடைபெறும். உங்கள் பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடத்திலும் இவ்வாறான பிரிவுகள் சிலவேளைகளில் இருக்கலாம்.

## உபகரணங்கள்

விஞ்ஞான ஆய்வுகூடங்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

## பௌதீக விஞ்ஞான ஆய்வுகூடம்

அளக்கும் உபகரணங்கள், வில்லைகள், அரியம் போன்றன.

## உயிரியல் விஞ்ஞான ஆய்வுகூடம்

வளர்க்கப்படும் விலங்கினங்கள், தாவரங்கள், அவற்றின் பகுதிகள்.

## ரசாயன விஞ்ஞான ஆய்வுகூடம்

பரிசோதனைக்குழாய், பன்சன் அடுப்பு, பீக்கர், அளவுக் கரண்டிகள், பலதரப்பட்ட ரசாயனப் பதார்த்தங்கள்.

## விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குள்...

விஞ்ஞான ஆய்வுகூடத்தினுள் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் குறித்து முழுமையான அறிவு உங்களுக்கு இருக்கவேண்டும். இல்லாவிடின், நீங்கள் பல ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடும். இதுபற்றி நீங்கள் ஆசிரியரிடமோ அல்லது விஞ்ஞான அறிவு கொண்டவர்களிடமோ கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். ஆய்வுகூடத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் தனித்திருந்து ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டாம். நீங்கள் எதிர்பாராத வேளைகளில் ஏதேனும் பிரச்சினைகள், விபத்துக்கள் ஏற்படலாம். அப்போது உங்களுக்கு உதவ இன்னொருவரும் உங்களுடன் இருப்பது அவசியமாகும்.

குறிப்பாக, விஞ்ஞான ஆய்வுகூடத்தில் இருக்கும் ரசாயனங்களை சுவைத்துப் பார்க்கவோ, நேரடியாக சுவாசித்து, மணத்தை அறிந்து கொள்ளவோ முயற்சிக்காதீர்கள். அத்துடன், உடலை ஸ்பரிசிக்காத வகையில் அவற்றைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக அங்கு இருக்கும் முகமூடிகள், கையுறைகள், பாதணிகள் என்பனவற்றினைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏதேனும் ரசாயனப் பொருள் உடலில் பட்டால் அதனை சவர்க்காரம் இட்டுக் கழுவி விட்டு, அது பற்றி ஆசிரியருக்கு அறிவியுங்கள்.

பரிசோதனைகளில் ஈடுபடும்போது ஒரு ரசாயனத் திரவத்தினை இன்னொரு ரசாயனத் திரவம் உள்ள குடுவைக்குள் இடும்போது அதனை உங்கள் கண்மட்டத்திற்கு கீழ் வைத்துக் கொள்ளுங்கள். இது சிதறினால் சிலவேளை கண்களுக்கு நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தக் கூடும்.

நீங்கள் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குச் செல்லும்போது எடுத்துச் செல்லும் பொருட்கள் குறித்து சற்று சிந்தியுங்கள். சில நேரங்களில் நீங்கள் உங்கள் புத்தகப் பையை எடுத்துச் செல்வீர்கள். ஆய்வுகூடம் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியைக் கொண்டிருப்பதனால் ஒரு புத்தகத்தையும் பேனாவையும் மட்டும் எடுத்துச் செல்லுங்கள்.

உணவுகளை எடுத்துச் செல்லாதீர்கள். ஆய்வுகூடத்தில் நிதானமின்றி நடந்து கொள்வது உங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். அங்கு இருக்கும் எல்லாப் பொருட்களையும் ஆராய்ந்து பார்க்க முனையாதீர்கள். ஆய்வுகளை முடித்துவிட்டு வெளியே வரும்போது கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்ளுங்கள்.

## விபத்து நேரும்போது

ஆய்வுகூடத்தில் விபத்துகள் நேராமல் இருக்க இயன்றளவு முனையுங்கள். எனினும், விபத்துக்கள் நேரும்போது தேவையான முதலுதவிகளை எடுத்துக்கொண்டு உடனடியாக வைத்தியரை சந்தியுங்கள். அவரிடம் விபத்துக் குறித்த அனைத்து விபரங்களையும் தெரிவிக்க வேண்டும். சிகிச்சை அளிக்க உதவியாக அந்த விபரங்கள் இருக்கும். இதன்போது ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

## ஆசிரியர்களின் கவனத்துக்கு

**விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் முன்னர் செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை பற்றி ஆசிரியர்கள் பிள்ளைகளைத் தெளிவுபடுத்த வேண்டும். அவர்களை அறிவுறுத்தும் விடயங்களை சித்திரங்கள், சுவரொட்டிகள் மூலம் காட்சிக்கு வைக்க வேண்டும். குறிப்பாக, சந்தேகங்கள் ஏற்படும் விடயங்கள் குறித்து கேள்விகளைக் கேட்க பிள்ளைகளை ஊக்கமளிக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வித்தியாசமான சிரிப்புச் சத்தத்தைக் கேட்டதாலும், காவல்காரர் அங்கு நிற்பதைப் பார்த்ததாலும் விமலுக்கு ஓர் இனந்தெரியாத பயம் ஏற்பட்டது. அந்த இரவு நேரக் குளிரிலும் அவனுடைய உடல் குப்பென வியர்த்துவிட்டது. நின்ற இடத்தைத் திரும்பிப் பார்த்தான். இப்பொழுது அங்கு யாரையும் காணவில்லை.

அப்படியானால் காவல்காரர் எங்கு போயிருப்பார் என்று சிந்தித்துக் கொண்டே நடந்தான். அவர் தன்னைக் கண்டுவிட்டால் தான் உறங்குவது போல் பாசாங்கு செய்த விஷயம் அவருக்குத் தெரிந்து உறக்கம் வந்துவிடும் என்று யாரோ எப்போதோ கூறியது ஞாபகம் இருந்ததாலேயே அவ்வாறு எண்ணலானான்.

ஆனால், அன்று அவனுக்கு உறக்கம் வருவதாகவே தெரியவில்லை. நூறு எண்ணி முடித்த பின்னும் உறக்கம் வருவதாகத் தெரியவில்லை. பல்வேறு சிந்தனைகள்

# அவன் முன் நின்ற அந்த உருவம்



அந்த சிரிப்புச் சத்தம் சாதாரண ஒரு மனிதனின் சிரிப்புச் சத்தம் போல் இருக்கவில்லை. அதோடு, சிரிப்புச் சத்தம் அந்தப் பாழடைந்த வீட்டுப் பக்கம் இருந்துதான் வந்தது. அப்படியானால் சிரித்தது யார்? அந்தக் கரிய உருவமாகத்தான் இருக்க வேண்டும். அந்த இடத்தில் காவல்காரருக்கு என்ன வேலை?

அந்தக் கரிய உருவத்துக்கும் காவல்காரருக்கும் இடையில் ஏதோ தொடர்பு இருக்கிறதா? சிந்திக்கும் போது அவனுக்கு இங்கு நிற்பதற்கே மிகுந்த பயமாக இருந்தது.காவல்காரர் தன்னைப் பார்ப்பதற்கு முன் மெதுவாகத் திரும்பிப் போய்விட வேண்டும் என்று நினைத்தவன் இருளில் மறைந்து மறைந்து நடக்கலானான். காவல்காரர் விடும் என்று நினைத்தவன் இருளில் மறைந்து மறைந்து போய் திரையரங்குக்குள் உள்ள அவன் படுக்கும் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

ஏனோ தெரியவில்லை அவனுடைய மனம் ''பக் பக்'' என்று அடித்துக் கொண்டது. படுக்கையில் படுத்துக்கொண்டு போர்வையை எடுத்து இறுக மூடிக்கொண்டான். போர்வையை போர்த்தியவுடன் அவன் உடல் வியர்வையால் மேலும் தெப்பமாக நனைந்துவிட்டது.




கண்களை மூடிக்கொண்டு மனதுக்குள்ளேயே ஒன்று இரண்டு என்று எண்ணலானான். அப்படி எண்ணினால் நூறு எண்ணுவதற்கு முன் தான் மாறி மாறி வந்துகொண்டு இருந்தன. காவல்காரரும், அந்தப் பெண்ணும் பாழடைந்த அந்த வீட்டுப்பக்கம் கண்ட கரிய உருவமும் தான் அவன் மனதில் மாறி மாறி வந்து கொண்டு இருந்தன. சிலருக்கு பேய்க்கோளாறு இருக்குமென்றும் ஆனால், அது வெளிப்படாமல் சாதாரண மனிதர் போன்றே அவர்களும் இருப்பார்கள் என்றும் சில சந்தர்ப்பங்களில் தான் அது வெளிப்படுமென்றும் அவன் கேள்விப்பட்டு இருக்கிறான்.

அவர்களைப் போல் காவல்காரரும் பகலில் சாதாரண மனிதராக இருந்து கொண்டு இரவில் பேய்க்கோளாறு ஏற்படுபவராக இருப்பாரோ? அவனுக்கு நினைக்கையில் நடுக்கமாக இருந்தது. 'இன்று மட்டும் விடிந்து விட்டால் போதும். இனியும் இந்த விஷப்பரீட்சை கூடாது. இனிமேல் இங்கு இருக்கக்கூடாது. இனி போய்விட வேண்டியதுதான்'

இப்படித் தீர்மானித்துக் கொண்டவன் போர்வையை நன்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு உறங்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான். மின்விளக்கை அணைக்கவும் பயமாக இருந்தது. அதனால், அதனை எரிய விட்டபடியே படுத்திருந்தான். மின்விளக்கை அணைக்காவிட்டால் முதலாளிக்குப் பிடிக்காது என்பது அவனுக்குத் தெரியும்.

**காவல்காரரும் அந்தப் பெண்ணும், பாழடைந்த வீட்டுப்பக்கம் கண்ட கரிய உருவமும் அவன் மனக் கண்ணில் தோன்றித் தோன்றி அவனை அச்சுறுத்திக் கொண்டு இருந்தன**

'அதுதான் இங்கிருந்து போகத் தீர்மானித்துவிட்டேனே. இனி முதலாளிக்கு நான் ஏன் பயப்பட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான். உறங்குவதற்கு எவ்வளவு முயற்சித்தும் உறக்கம் வருவதாகத் தெரியவில்லை. போர்வையை நன்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு உறங்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான். அவ்வேளையில், அறைக்குள் யாரோ நடமாடுவதுபோல் உணர்ந்து அவனையும் அறியாமல் கண்களைத் திறந்து கொண்டான்.

ஆனாலும், போர்வையை அகற்றிப் பார்ப்பதற்கும் பயமாக இருந்தது. உள்ளே யாரோ நடமாடுவது நிழல்போல் அவனுக்குத் தெரிந்தது. அடுத்த கணம்....? சராலென அவன் போர்த்தியிருந்த போர்வையை யாரோ பிடித்து இழுத்தார்கள். அலறித் துடித்துக் கொண்டு பார்த்தான். அங்கே நின்றுகொண்டு இருந்த உருவத்தைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானான்.

(தொடரும்....)




காட்டில் இரை தேடிய சிங்கம் ஒன்று தவம் செய்து கொண்டிருந்த முனிவரைப் பார்த்தது. தன்னைப் பார்த்து கொஞ்சமும் பயப்படாமல் முனிவர் அமைதியாக இருப்பதைக் கண்டு வியப்படைந்த சிங்கத்திடம், ''உயிர்களைக் கொன்று தின்பது பெரும்பாவம். பெரிய உயிர், சிறிய உயிர்களிடம் இரக்கம் கொள்ள வேண்டும். யானை, உயிர்களைக் கொன்று தின்பதில்லை. ஆனால், பலமுள்ளதாக இருக்கிறது. தன்னைப் போலவே எல்லா உயிர்களையும் நினைக்க வேண்டும்'' என்று முனிவர் கூறினார்.

அதுகேட்ட சிங்கம், 'இனி எந்த உயிரையும் கொல்வதில்லை' என்று முடிவு செய்தது. இயற்கையாக இறந்த மிருகங்களின் உடல்களை மட்டும் சாப்பிட்டது. தன்னைக் கண்டு பயந்த மிருகங்களிடம், ''பயப்பட வேண்டாம். நான் இனி யாரையும் கொல்லமாட்டேன்'' என்று வாக்குறுதி அளித்தது.

மிருகங்களைப் பயமுறுத்த அவசியமில்லாமல் போனதால் கர்ஜனை நின்றுவிட்டது. சிங்கம் தங்களை எதுவும் செய்யாது என்பது உறுதியாகத் தெரிந்துபோனதால் மற்றப் பிராணிகளுக்குப் பயம் போய்விட்டது. சிங்கத்தின் எதிரில் தைரியமாக நடமாட ஆரம்பித்தன.

ஒருநாள் சிங்கம் களைப்புடன் தூங்கிக் கொண்டிருந்தது. மான் கூட்டமொன்று ஒன்றையொன்று துரத்தி விளையாடிக் கொண்டிருந்தன. அந்த விளையாட்டு உற்சாகத்தில் அடிக்கடி சிங்கத்தின் மீது தடுமாறி விழுவதும் எழுந்து ஓடுவதுமாக இருந்தன. மான்களின் கொம்புகள் பட்டு சிங்கத்துக்கு சிறுசிறு காயங்கள் ஏற்பட்டன.

சிங்கம் மான்களிடம், ''சற்றுத் தள்ளி விளையாடுங்கள்'' என்று சொல்லியும் அவை கேட்கவில்லை. வேறு வழியில்லாமல் சிங்கம் பலவீனத்துடன் கஷ்டப்பட்டு எழுந்து வலியினால் முனகிக் கொண்டே நகர்ந்தது. அப்போது அதன் எதிரில் ஒரு நரி வந்தது.

''என்ன சிங்கராஜா, உங்க உடலில் காயங்கள்! மிகவும் பலவீனமாக வேறு இருக்கிறீர்கள். என்ன நடந்தது?'' என்று நரி கேட்டது.

''நீ மட்டும்தான் என்னை இன்னும் சிங்கராஜா என்று கூப்பிடுகிறாய். மற்ற விலங்குகள் என்னை மதிப்பதே இல்லை'' என்று வருத்தமாகச் சொன்னது சிங்கம்.

''நீங்கள் முனிவர் பேச்சைக் கேட்டது தவறு. ஒவ்வொரு உயிரும் தனக்கென்று உள்ள தனித்தன்மையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்கக்கூடாது. அப்படி விட்டுவிடுவதும் உயிரை விடுவதும் ஒன்றே. சீறினால்தான் பாம்புக்குப் பயப்படுவார்கள். யானையின் வாய் அமைப்பு தாவர வகைகளை உண்ணுவதற்கு ஏற்ற விதத்தில் இருக்கிறது. நாம் மாமிச உணவு சாப்பிடுவதற்கு ஏற்ற வகையில் நமது பற்களின் அமைப்பும் வேட்டையாடுவதற்கு ஏற்ப உடலமைப்பும் உள்ளன. நீங்கள் நீங்களாகவே இருங்கள். அப்போதுதான் உங்களால் உலகத்தில் பிழைக்க முடியும்'' என்றது நரி.


''நீ சொல்வதுதான் சரி. நான் பழையபடி மாறிவிடுகிறேன். எனக்கு முதல் விருந்து நீதான்'' என்றது சிங்கம்.

அது சொல்லி முடிக்கும் முன்பே சற்றுத் தொலைவுக்கு ஓடிய நரி. அப்படியே திரும்பிப் பார்த்துச் சொன்னது,

''எங்கள் இனத்துக்கு என்றே உள்ள புத்திசாலித்தனத்தால், நீங்கள் இப்படிப்பட்ட முடிவை எடுப்பீர்கள் என்று நான் முன்பே ஊகித்தேன். அதன் பின்பும் உங்கள் முன் நிற்க எனக்கென்ன பைத்தியமா?'' என்றபடி வெகுவேகமாக ஓடி மறைந்துவிட்டது. அதன்பின் சிங்கத்தின் கம்பீரமான கர்ஜனை கேட்டு விலங்குகள் வழக்கம்போல் நடுங்க ஆரம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டுத்துறையில் பிரபல்யம் பெற்றுள்ள விளையாட்டுக்களின் வரலாறு மற்றும் அவை விளையாடப்படும் முறை பற்றி 'விஜய்'யில் வழங்கி வருகின்றோம். அந்த வரிசையில் இன்று மேலும் சில விளையாட்டுக்களைப் பற்றி பார்ப்போம்.**



# கபடி விளையாட்டு

கபடி அல்லது சடுகுடு என்று அழைக்கப்படும் விளையாட்டு தமிழர்களால் பல காலமாக பரவலாக விளையாடப்படும் தமிழர் விளையாட்டுக்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. எனினும், இன்று இப்போட்டி தெற்கு ஆசிய நாடுகளில் பரவலாக விளையாடப்படுகிறது.

இவ்விளையாட்டு இரு அணிகளுக்கு இடையே நிகழும் ஆட்களை பிடிக்கும் ஒரு போட்டி. ஒவ்வொரு அணியிலும் ஏழு பேர் இருப்பர். மொத்த விளையாட்டு நேரம் 40 நிமிடங்கள். இந்த விளையாட்டிற்கு வெறும் நீள்சதுரமான (ஆடுகளம்) இடம் இருந்தால் போதும். இந்த ஆடுகளத்தை ஒரு நடுக்கோட்டால் இரண்டாகப் பிரித்து ஒரு பக்கத்துக்கு ஓர் அணியாக இரு அணியினரும் இருப்பர். ஆட்டக்காரர்கள் எப்பொழுதும் புற எல்லைக் கோடுகளைத் தாண்டிச் செல்லலாகாது. இவ்விளையாட்டுக்கு ஒரு நடுவரும் இருப்பார்.

## விளையாடும் முறை

ஓர் அணியில் இருந்து யாரேனும் ஒருவர் புறப்பட்டு நடுக்கோட்டைத் தாண்டிக் கொண்டு 'கபடிக் கபடி' (அல்லது 'சடுகுடு') என்று விடாமல் கூறிக் கொண்டே எதிர் அணியினர் இருக்கும் பகுதிக்குச் சென்று எதிர் அணியினரைக் கையாலோ, காலாலோ தொட்டுவிட்டு எதிர் அணியினரிடம் பிடிபடாமல் நடுக்கோட்டைத் தாண்டி மீண்டும் தம் அணியிடம் திரும்பி வரும் ஒரு வகை விளையாட்டு இது. தொடுபட்டவர் ஆட்டம் இழப்பார். ஆனால், அச்சந்தர்ப்பத்தில் எதிரணியினர் சூழ்ந்து பிடிக்க வருவர். மூச்சு விடாமல் 'கபடிக்கபடி' என்று கூறிக் கொண்டே எதிரணிப் போட்டியாளரைத் தொட்டுவிட்டு அகப்படாமல் திரும்பி வரவேண்டும். அகப்பட்டால் சென்றவர் ஆட்டமிழப்பார். மூச்சு விடாமல் 'கபடிக் கபடி' என்று சொல்வதற்குப் 'பாடுதல்' என்று பெயர். தம் அணிக்குத் திரும்பும் முன் பாடுபவர் பாட்டை நிறுத்தினாலும் குறித்த போட்டியாளர் ஆட்டம் இழப்பார்.

## ஆடுகளம்

ஆடுகளம், மேடு பள்ளம் இல்லாத ஒரு சமதளமாக இருக்கவேண்டும். ஆட்கள் கீழே விழுவதும், இழுக்கப்படுவதும் நிகழ்வதால், தரை மண் அல்லது மரத்தூள், மணல் பரப்பியதாக இருக்க வேண்டும். உறுதியான சீமெந்து அல்லது கரடுமுரடான, கருங்கல் பதிந்த தரையாக இருப்பது நல்லதல்ல. ஆண்களின் ஆடுகளம் 12.5மீx10 மீ பரப்புக் கொண்டதாகும். பெண்களின் ஆடுகளம் 11மீx8 மீ ஆகும். ஆடுகளத்தின் எல்லைகளை குறிக்கும் கோடுகளும் மற்றும் களத்தைப் பிரிக்கும் கோடுகளும் 2 அங்குல (5 செ.மீ) அளவினதாக இருத்தல் வேண்டும்.



# கராட்டே

கராட்டே என்பது, சண்டைக்குரிய அல்லது தற்காப்புக்கான ஒரு கலையாகும். இது ஜப்பானியத் தீவுக்கூட்டங்களில் ஒன்றான ரியூக்யுத் தீவுக்கு உரிய சண்டை முறைகளும் சீனாவின் 'கென்போ' என்னும் சண்டை முறையும் கலந்து உருவானது. முதன்மையாக இது ஒரு தாக்குதல் கலையாகும். குத்துதல், உதைத்தல், முழங்கால் மற்றும் முழங்கைத் தாக்குதல்கள், திறந்த கை உத்திகள் என்பன இக்கலையில் பயன்படுகின்றன. இறுகப் பிடித்தல், பூட்டுப் போடுதல், கட்டுப்படுத்துதல், எறிதல், முக்கியமான இடங்களில் தாக்குதல் என்பனவும் சில கராட்டேப் பாணிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## வரலாறு

ரியூக்யுத் தீவினரில் 'பெச்சின்' என்னும் வகுப்பைச் சேர்ந்தோரிடையே இக்கலையானது 'டி' (ti) அல்லது 'டெ'(te) என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. 1372 இல், சுசான் மன்னர் சாட்டோவினால், மிங் வம்சத்துச் சீனாவுடன் வணிகத் தொடர்புகள் உருவாக்கப்பட்டபோது, சீனாவிலிருந்து வந்தவர்கள் மூலம் பலவகையான சீனத்துச் சண்டைக் கலைகள் ரியூக்யுத் தீவுகளுக்கு அறிமுகமாகின. குறிப்பாக இவை சீனாவின் ஃபுஜியன் மாகாணத்திலிருந்தே வந்தன. 1392 ஆம் ஆண்டில், 36 சீனக் குடும்பங்கள், பண்பாட்டுப் பரிமாற்றம், சீனச் சண்டைக் கலை பற்றிய அறிவை பகிர்ந்து கொள்ளல் போன்ற காரணங்களுக்காக ஒக்கினாவாவுக்கு வந்தனர். 1429 இல் ஷோகினாவோ மன்னர் காலத்தில் ஒக்கினாவாவில் ஏற்பட்ட அரசியல் மையப்படுத்தல், 1609 ஆம் ஆண்டில், ஒக்கனாவா ஷிம்சு இனக்குழுவினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் ஆயுதங்கள் தடை செய்யப்பட்டமை போன்ற நிகழ்வுகளும் ஆயுதங்கள் இல்லாத சண்டை முறைகள் வளர்ச்சியடைவதற்குக் காரணமாயின.

இந்த வரிசையில் உருவான 'கராட்டே' கலையானது இன்று ஒரு தற்காப்புக்கலையாக உலகம் பூராவும் வியாபித்துள்ளது.

# குத்துச்சண்டை

ஒரே எடை தரத்தில் இரு வீரர்கள் கைமுஷ்டியுறை மற்றும் சில பாதுகாப்பு அணிகலன்கள் அணிந்து கை முஷ்டிகளால் மட்டும் சண்டை செய்வதே குத்துச்சண்டை ஆகும். ஒருவர் அடித்து தனது எதிரியை வீழ்த்திவிட்டால், விழுந்தவர் நடுவர் 10 எண்ணுவதற்குள் எழும்பாவிட்டால் வீழ்த்தியவர் வெற்றி பெறுவார். அல்லது போட்டியின் போது ஒரு சண்டையாளரின் உடல் நிலைமை காரணமாக தொடர்ந்து போட்டியை நீட்டிச்செல்ல முடியாவிட்டாலும் மற்றைய சண்டையாளர் வெற்றி பெறுவர். இரு சண்டையாளர்களும் குறிப்பிட்ட சுற்றுகள் தொடர்ந்து சண்டையிட்டு, அதற்குப் பின்னரும் நிலைத்து நின்றால் அவர்கள் பெற்ற புள்ளிகளை வைத்து வெற்றியாளர் நடுவர்களால் தேர்வு செய்யப்படுவார்.



# சரிவை சரிக்கட்ட தயாராகும் ஆஸி அணி

**தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 17 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்கா அணி மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளது. அவுஸ்திரேலிய அணி அண்மைக்காலமாக சரிவு நிலையில் இருந்து வருகின்ற போதிலும், எந்த வேளையிலும் அவ்வணி சிலிர்த்தெழக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பதனால் தென்னாபிரிக்க அணி மிகவும் அவதானமாகவே அவுஸ்திரேலியாவை எதிர்த்தாடும் என்று கருதப்படுகின்றது.**

அதேவேளை, இம்முறை தென்னாபிரிக்க அணியானது முழுமையான ஓர் அணியாகவே அமைந்துள்ளது. துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு அனைத்திலும் சிறந்து விளங்கும் வீரர்களைக் கொண்ட அணியாக தென்னாபிரிக்க அணி இருப்பதையிட்டு அணியின் தலைவர் ஸ்மித் முழுமையான நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

மறுபுறம் அவுஸ்திரேலிய அணியை எடுத்துக் கொண்டால் அவுஸ்திரேலியாவில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளமையால் ஆஸி ரசிகர்களையும் திருப்திபடுத்த வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். இந்தியாவில் சந்தித்த பின்னடைவை சீர்படுத்த வேண்டிய நிலையும் ஆஸி அணிக்கு உள்ளது.

இத்தகையவோர் நிலையில் அவுஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான போட்டித் தொடர் இரண்டு அணிக்கும் இன்றியமையாத போட்டித் தொடராக உள்ளமை மறுக்கமுடியாததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'பிக் பென்' மணிக்கூட்டுக் கோபுரம்

'பிக் பென்' மணிக்கூட்டுக் கோபுரம் என்றவுடன் எமது நினைவுக்கு வருவது இங்கிலாந்தின் லண்டன் மாநகரமாகும். உலகப் புதுமைகளில் ஒன்றாக இந்த 'பிக் பென்' மணிக்கூட்டுக் கோபுரம் கருதப்படுவதற்கு சில சுவையான காரணங்கள் உள்ளன.

இங்கிலாந்தின் நாடாளுமன்றமான வெஸ்மின்ஸ்டர் கட்டடத்திற்கு கிழக்காக இந்த மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்திருக்கின்றது. இந்த நான்முக கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் மணிக்கூடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கோபுரத்திற்கு 'புனித ஸ்டீவனின் கோபுரம்', 'பிக்டொம்' என்று வேறு பெயர்களும் உள்ளன.

## நிர்மாணித்தவர்

இங்கிலாந்தின் லண்டனில் அமைந்துள்ள வெஸ்மின்ஸ்டர் நாடாளுமன்றக் கட்டடத்தில் 1834 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பாரிய தீ பற்றிக் கொண்டது. அப்போது சார்ள்ஸ் பெரி என்ற கட்டடக் கலைஞர் ப்ரைடன் எனும் நகரில் ஆலய நிர்மாணப் பணிகளை முடித்துவிட்டு, திரும்பிக் கொண்டிருந்தார். வெஸ்மின்ஸ்டர் கட்டடம் தீயால் எரிந்து நாசமாவதை அவர் நேரடியாக கண்ணுற்றார். தீ அணைக்கப்பட்ட பின்னர் அந்த இடத்தில் புதிதாக கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. கட்டட நிர்மாண வடிவமைப்பாளரை தெரிவு செய்வதற்காக பிரபல்யம் பெற்ற கட்டடக் கலைஞர்களிடையே போட்டி ஒன்று நடத்தப்பட்டு, கட்டட வடிவமைப்பு வரைபடங்களும் பெறப்பட்டன. அந்தக் கட்டடக் கலைஞர்களுள் ஒருவராக சார்ள்ஸ் பெரியும் இருந்தார். இவரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டட வடிவமைப்பு வரைபடங்களுள் நான்கு முகப்புகளைக் கொண்ட பிரமாண்டமான மணிக்கூட்டுக் கோபுரத்தின் வரைபடமும் இருந்தது. போட்டித் தேர்வுக்காகக் கிடைக்கப்பெற்ற வரைபடங்களுள் சார்ள்ஸ் பெரியின் வரைபடம் தெரிவானது. அதற்கிணங்க அவரின் கைவண்ணத்தில் நிர்மாணிக்கப்பட்டதுதான் லண்டன் மாநகரின் அடையாள முத்திரையாகக் கருதப்படும் இந்த 'பிக் பென்' கோபுரமாகும்.

## ஒகஸ்டஸ் பியுஜினின் உதவி

சார்ள்ஸ் பெரி பிரசித்தம் பெற்ற கட்டடக் கலைஞராக இருந்தபோதும் அப்போதும் இங்கிலாந்தில் புகழ் பெற்ற கட்டடக் கலைஞராக இருந்த ஒகஸ்டஸ் பியுஜின் என்பவரது உதவியையும் 'பிக் பென்' நிர்மாணத்தின் போது பெற்றுக் கொண்டார்.

இவர் மணிக்கூட்டுக் கோபுரம் நிர்மாணிப்பதில் தனிச்சிறப்பும் அனுபவமும் பெற்ற கட்டடக் கலைஞராவார். பியுஜினின் வாழ்க்கையில் இறுதியாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமும் இதுவாகும். இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் அழகிய கலை வடிவத்தாலும் கண்கவர் தோற்றத்தாலும் வியப்படைந்த அவர், அந்த சாதனையின் இன்ப அதிர்ச்சியைத் தாங்காது மாரடைப்பால் உயிரிழந்தார்.

அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற 'நியோ-கொதிக்' இத்தாலிய சம்பிரதாய கட்டடக்கலைக்கமைய இந்த கோபுரத்தை வடிவமைப்பதில் பியுஜின் முழுமூச்சாக ஈடுபட்டார்.

அவர் மரணமடைவதற்கு சற்று முன்னர் அவரது தினக்குறிப்பில் ''நான் எனது வாழ்க்கையில் இரவு - பகலாகப் பாடுபட்டு நிர்மாணித்த ஒரே கட்டடம் இதுவே. இந்த மணிக்கூடு உண்மையிலே மிகவும் அழகாக இருக்கின்றது என்பதால் இதை நம்ப முடியவில்லை'' என்று குறிப்பொன்றை எழுதியிருந்தார்.

## கோபுர உச்சியில் ஒளிவிளக்கு

இங்கிலாந்தின் நாடாளுமன்றமும் பிரபுக்கள் சபையும் கூடுவது வெஸ்மின்ஸ்டர் நாடாளுமன்றக் கட்டடத்திலாகும். இந்த மணிக்கூட்டுக் கோபுரம் நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கோபுரத்தின் உச்சியில் அழகிய ஒளிவிளக்கு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தின் நாடாளுமன்றம் கூடும் நாட்களில் கோபுர உச்சியில் உள்ள ஒளிவிளக்கை எரியச் செய்வது அன்றிலிருந்து இன்று வரை மரபுரீதியாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

## 'பிக் பென்' பற்றிய சிந்தனை

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் உயரம் 316 அடிகளாகும். (96.3 மீற்றர்). முதலாவது 61 மீற்றர் உயரம் வரையில் மணிக்கூட்டுக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது கருங்கல்லினால் ஆனது. அதற்கு மேலுள்ள பகுதி இரும்பினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 4 மீற்றர் ஆழத்தில் போடப்பட்டுள்ள கொங்கிரீட் அடித்தளத்திற்கு மேலாகவே இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் முழுப் பரப்பளவும் 4,650 சதுர மீற்றர்களாகும். உலகில் பாரிய மணி ஓசை எழுப்பும் ஒரே மணிக்கூட்டுக் கோபுரமும் இதுவே. சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்துக்கு இதன் இனிமையான ஓசை கேட்கின்றது.

இந்த கடிகாரத்தின் இயந்திரப் பகுதி பொருத்தும் பணிகள் 1854 ஆம் ஆண்டளவிலேயே பூர்த்தியடைந்திருப்பதோடு, கோபுர நிர்மாணப்பணிகள் முடிவடைய சுமார் 4 ஆண்டுகள் வரை எடுத்துள்ளன. இங்கு பாரிய 4 மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று 15 நிமிடத்திலும் இன்னொன்று 30 நிமிடத்திலும் அடுத்தது 45 ஆவது நிமிடத்திலும் 4 ஆவது மணி 60 ஆவது நிமிடத்திலும் ஓசை எழுப்பும். இதன் பின்புறத்தில் படிக்கட்டொன்றும் உள்ளது.

## மணிக்கூட்டு முகம்

இந்த மணிக்கூட்டு கோபுரத்துக்கு 4 முகங்கள் உள்ளன. இவை 50 மீற்றர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அதனால், உலகில் பிரமாண்டமான நான்முக மணிக்கூடாக இது கருதப்படுகின்றது. நான்முகங்களும் 7 மீற்றர் விட்டம் கொண்ட இரும்பினால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. மணிக்கூட்டின் சுற்றளவு 23 அடிகளாகும். மணித்தியால ஊசியின் நீளம் 9 அடிகளாகும். நிமிடத்தைக் காட்டும் ஊசியின் நீளம் 14 அடிகளாகும். அதன் பாரம் 200 இறாத்தல்களாகும்.

கடிகாரத்தில் உள்ள ரோமன் இலக்கம் ஒன்றின் உயரம் 2 அடிகளாகும். இந்த ஊசியின் நகர்வுச் சமநிலையைப் பேணுவதற்காக மூன்று செம்பு நாணயங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கடிகாரத்தில் 312 இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவை சூரிய ஒளிபட்டு பளிச்சிடும்போது தொலைவில் உள்ளவர்களாலும் சரியாக நேரத்தைப் பார்க்க முடியும்.

## பிக் பென் என்று பெயர்வரக் காரணம்

சேர். பென்ஜமின் ஹோல் என்பவரின் நினைவாக 'பிக் பென்' என்ற பெயர் சூட்டப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர் அப்போது இங்கிலாந்தின் கட்டட நிர்மாணப் பணிப்பாளராக இருந்ததோடு, இந்த மணிக்கூட்டுக் கோபுர நிர் மாணப்பணிகளையும் கண்காணித்துள்ளார். இவர் சாதாரண மனிதர்களை விட மிகவும் உயரமாக இருந்ததால் அவர் 'பிக் பென்' என்று அழைக்கப்பட்டதோடு, இந்த மணிக்கூட்டுக்கும் அப்பெயர் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



நேரம் காட்டும் பாரிய மணி



சார்ள்ஸ் பெரி


**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 184 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-195) |
|---|---|---|---|---|
| எஃப்.மாஜிதா, தரம் - 3^A, விசாகா பா.ம.வித்., பதுளை. | எஸ்.பிரஷாந்தன், தரம் - 7^A, ஹம்ஸா மு.ம.வித்., கொழும்பு. | ஏ.ஜொனார்த்தனன், தரம் - 7, புனித பேதுரு கல்., கொழும்பு. | அல்ஜாஸ் சம்மி, தரம் - 5^H, ஹிழுறியா வித்., மட்டக்களப்பு. | எஸ்.அனோசன், தரம் - 9, இந்துக் கல்லூரி, கம்பளை. |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.198 (5)




**மேலிருந்து கீழ்**

01. அறுசுவைகளில் ஒன்று.
02. வீதிகளை செப்பனிடப் பயன்படும் நிலக்கரியிலிருந்து தயாரிக்கப்படுவது.
03. கோள் என்றும் அர்த்தப்படும்.
04. ஒரு பொருளின் சுற்றளவைக் கணிப்பதற்கு பொருளின் நீளம், பொருளின் ................ தேவை.
06. தூசு-ஒத்தகருத்துச் சொல்.
07. மணலும் மணல் சார்ந்த வரண்ட பிரதேசமும்.

**இடமிருந்து வலம்**

01. மின்னலின் தாக்கத்தைத் தடுப்பதற்கு உயரமான இடங்களில் பொருத்தப்படுவது.
04. புறம்-எதிர்க்கருத்துச் சொல்.
05. (நாடகங்களில்) புதிதாக அறிமுகமாகின்றவர்.
08. நீர் போக்குவரத்துக்கு உதவும் போக்குவரத்து சாதனமொன்று.

### குறுக்கெழுத்துப்போட்டி 195 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. இலவசம்
02. கைநாட்டு
03. கருணை
05. தகனம்
06. சகுனம்

**இடமிருந்து வலம்**

01. இயற்கை
04. வரதட்சணை
07. கடுகு
08. கம்பம்

குறுக்கெழுத்துப் போட்டி -198
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எஃப்.ஷாஹினா, தரம் - 13, காஹிரா ம.வித்., அஹஸ்வெவ.

அ.சுபாஷினி, உயர்தரம் (கலை), புனித மரியாள் த.ம.வித்., எட்டியாந்தோட்டை.

எம்.ரஸீம் ஃபர்ஹான், தரம் - 7^A, சேர். ராஸிக் ஃபரீட் மு.வித்., கொழும்பு-15.




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.12.24 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 187**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### ஏறுவரிசையில் எழுதுக (4)

(i) 342, 57.5, 0.03, 0.5, 237

..............................................................

(ii) M, C, IX, I, LXX, DVI

..............................................................


(iii) 240, 0.24, 24.5, 24.05, 0.38

..............................................................

(iv) XX, D, V, LXX, MII, XVIII

..............................................................

### வழி காட்டுங்கள் (1)



### (A) இடைவெளியை நிரப்புக (3)

1. a .......................... of pillars - தூண் வரிசை.
   (group/column/chain)
2. a .............................. of players - விளையாட்டு வீரர்கள் குழு.
   (team/album/set)
3. an ............................... of pictures - படத் தொகுதி.
   (book/album/cluster)
4. a ........................... of soap - சவர்க்காரக்கட்டி.
   (piece/sip/bar)

### (B) சரி/பிழை கூறுக

1. வளி மாசடைதல் வீதம் குறைவாகவுள்ள நாடு ஐஸ்லாந்து ஆகும். ( )
2. பங்களாதேஷ் நாட்டின் நாடாளுமன்றம் 'சூறா' எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது. ( )
3. அரேபிய தீபகற்பம் உலகின் மிகப்பெரிய தீவு ஆகும். ( )
4. திவேஹி என்பது மாலைதீவு மக்களின் தேசிய மொழி ஆகும். ( )

## அறிவுக்கு விருந்து 184 விடைகள்

**போட்டி: 02**

a) 4 ஆவது படம்
b) 1 ஆவது படம்
c) 2 ஆவது படம்
d) 4 ஆவது படம்

**போட்டி: 03**

(A)
1) இலங்கை
2) பிரித்தானிய அரச பரம்பரையின் வாசஸ்தலம்.
3) சைப்ரஸ்
4) சுசில் ப்ரேமஜயந்த
5) பசுபிக் சமுத்திரம்

(B)
1) UNDP - United Nations Development Programme.
2) Unicef - United Nations Children's Fund. (United nations international children's emergency fund)
3) UNHCR - United Nations High Commissioner for Refugees.

**போட்டி: 04**

1 - c
2 - e
3 - b
4 - a
5 - d

### ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக (2)




### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற் குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இசையில் சாதனை புரிந்த உலகப் புகழ் பீத்தோவன்


லூட்விக் வொன் பீத்தோவன்


பீத்தோவன் சிறு பராயத்தில்


பீத்தோவன் கல்வி கற்ற பாடசாலை

மேற்கத்தேய இசைத்துறையில் நிபுணத்துவம் மிக்கவராக கருதப்படுபவர்தான் பீத்தோவான் என்பவராவார். 1770 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்த இவர் சிறந்தவோர் இசை விற்பன்னர் மட்டுமன்றி, கவிஞராகவும் பியானோ வாசிப்பதிலும் சிறந்து விளங்கியவராவார்.

ஜேர்மனியில் பிறந்தவராயினும் பீத்தோவனுக்கு 20 வயதாக இருக்கையில் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் இவர் குடியேறியதிலிருந்து மரணமடையும் வரையில் அங்கேயே வாழ்ந்து வந்தார். இவர் வாழ்ந்த காலங்களில் கரடு முரடான வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார்.


20 வயதை அடைகையில் இவரது காது கேட்கும் திறன் படிப்படியாக குறையத் தொடங்கியது என்றாலும் அவருடைய இசைப் படைப்புக்களிலிருந்து அவர் பின் வாங்கவில்லை. பீத்தோவனின் ஆரம்பகால இசைப்பயிற்றுனராக அவரது பெற்றோரே இருந்தனர். பின்னர் தந்தையாரின் நண்பரான செரிஸ்டியன் கொட்டோப் என்பவர் இசைப்பயிற்சிகளை வழங்கினார். பீத்தோவனின் வீட்டிற்கு வந்து போகும்போது பீத்தோவனின் திறமைகளை அவர் இனங்கண்டதன் காரணமாகவே இந்த வாய்ப்பு பீத்தோவனுக்கு கிடைக்கப் பெற்றது.

## டிசம்பர் 16ஆம் திகதி அவரது பிறந்த தினமாகும்

இவரது பயிற்றுவிப்பின் பலனாக பீத்தோவன் தனது முதலாவது இசைப்படைப்பை வெளியிட முடிந்தது. 1787 ஆம் ஆண்டில் பீத்தோவன் வியன்னாவில் வொல்புகேன் எமடியஸ் மெலட் என்பவருடன் இசைத்துறை சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு இசைக்கல்வியை மேலதிகமாக பயிலமுடிந்தது. நாளடைவில் வியன்னாவில் மக்கள் அபிமானம் பெற்ற சிறந்தவொரு இசையமைப்பாளராக பிரபல்யம் பெற்றதுடன், 1795 ஆம் ஆண்டில் ஒரே நேரத்தில் மூன்று பியானோக்களை வாசித்து பலரது கவனத்தையும் ஈர்த்தார். 1827 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி மரணமடைந்தார் பீத்தோவன். ஆனால், இத்தனை வருடங்கள் கடந்த பின்னரும் இன்றும் கூட இசைத் துறையில் பீத்தோவனுக்கு முக்கியதோர் இடம் இருந்து கொண்டே உள்ளது.


பீத்தோவனின் மரண ஊர்வலம்


பீத்தோவனின் கல்லறை


பீத்தோவன் பிறந்த இல்லம்




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, டிசம்பர் மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 17, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org